சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழக வெளியீடு

ஸ்ரீமாதவச் சிவஞானசுவாமிகள்

மொழிபெயர்த்தருளிய

சிவதத்துவவிவேகம்

திருநெல்வேலி இந்துகலாசாலைத்

தமிழாசிரியர்

வி. சிதம்பர ராமலிங்கபிள்ளை யவர்கள்

எழுதிய

அரும்பொருள் விளக்கத்துடன்

திருநெல்வேலித்

தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம்

லிமிட்டெட்

உருத்ரோத்காரிஞு—புரட்டாசிமீ.

[பதிவுசெய்யப்பட்டது]

Published by
The South India Saiva Siddhanta
Works Publishing Society, Tinnevelly, Ltd.,
Tinnevelly & Madras.
1923

P. R. RAMA IYAR AND CO., PRINTERS, MADRAS

பதிப்புரை

சிவதத்துவ விவேக மென்னும் நூல் வடமொழியில் அப்பதீக்கிதராற் செய்யப்பெற்றது. அது சிகரிணி யென்னும் பாவாற் செய்யப்பட்டமையின் சிகரிணிமாலை யென்றும் வழங்கப்படும். நூலாசிரியராகிய அப்பதீக்கிதரே அதற்கு உரையும் வகுத்தனர்.

அந்நூல் பூர்வபாகம் உத்தரபாக மென்னும் இரண்டு பிரிவுகளை யுடையது. பூர்வபாகத்தில் பிரபல சுருதியாகிய உபநிடதங்களுட் சிறந்த அதர்வசிகை, சுவேதாச்சுவதரம் அதர்வசிரசு, கைவல்லியம், தைத்திரியம், பிருகதாரணியம், மாண்டூக்கிய மென்பவற்றின் பொருள் ஆராயப்படுகின்றது: உத்தரபாகத்தில் புராணம், இதிகாசம், மிருதி, கீதை முதலியவற்றின் பொருள் ஆராயப்படுகின்றது. இவ்வாராய்ச்சியால் சிவபெருமானே வேத முதலிய அனைத்து நூல்களானும் கூறப்பட்ட முதற் கடவுளென்பது நிலைநிறுத்தப் படுகின்றது. ஆதலின் அந்நூல் சைவ சமயத்தார் சிவபெருமானது பெருமையை யுணர்ந்து அப்பெருமானிடம் அன்பு செலுத்தற்கண் அவர்களை ஊக்கிநிற்கும் சிறப்பு வாய்ந்ததாகின்றது.

இவ்வாறாயினும் அந்நூல் வடமொழியி லிருத்தலின் அது வடமொழி வல்லார்க்கே பயன்படுவ தாகின்றது. தமிழும் சைவமுஞ் செய்த தவப்பயனாக அவதரித்தருளிய ஸ்ரீ பாஷ்யகாரராகிய மாதவச் சிவஞான சுவாமிகள், வடமொழிப்பயிற்சி மிகவும் குன்றிவருங் கால நிலையைத் திரு

வுளங்கொண்டு தமிழொன்றே வல்லவர்களும் அந்நூற் பயனை யடையவேண்டுமென்னும் பெருங்கருணையால் அவ் வடமொழிநூலைத் தமிழிற் சிவதத்துவ விவேகமென்னும் பெயரால் மொழிபெயர்த் தருளினார்கள். சுவாமிகள் பெருங் கருணை காரணமாகவே அதனை மொழிபெயர்த் தருளினார்களென்பது அதனை வாசிப்பவர்கட்கு நன்கு விளங்கும். அத்துணை எளிய நடையும் இனிமையும் தெளிவு முள்ளது அம்மொழி பெயர்ப்பு.

தமிழ்ச் சிவதத்துவவிவேகம் இதற்கு முன்பு பலராலும் அச்சிடப்பட் டிருக்கின்றது, சமயநூற்கல்வி யருகிய இக் காலத்தில் அதற்கோர் குறிப்புரை யெழுதி வெளியிடல் மிகுந்த நன்மை தருமென்பது எங்கள் கருத்து. இக் கருத் திற் கிணங்கித் திருநெல்வேலி இந்து கலாசாலைத் தமிழ்ப் போதகாசிரியர் திருவாளர். வி. சிதம்பரராமலிங்க பிள்ளை யவர்களால் அரும்பொருள் விளக்கம் எழுதப்பட்டு எங்களது இப் புதிய பதிப்பிற் சேர்க்கப்பட் டிருக்கின்றது. அவர் களுக்கு யாங்கள் எங்கள் மனமார்ந்த நன்றியைச் செலுத்து கிறோம்.

ஸ்ரீ மாதவச் சிவஞான சுவாமிகள் அருளிச்செய்த ஏனைய பிரபந்தங்களையும் இவ்வாறே அரும்பொருள் விளக்கத் துடன் வெளியிடக் கருதியிருக்கின்றோம். எல்லாம் வல்ல சிவபெருமான் எங்கள் நன்முயற்சி முற்றுமா றருள்செய்ய அப் பெருமானது திருவடிகளைச் சிந்திக்கின்றோம்.

திருநெல்வேலி,
15-10-1923. } சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார்.

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

சிவதத்துவவிவேகம்

பாயிரம்

உலகெ லாந்தன தொருசிறு கூற்றினு ளமைய
வலகி லாற்றலா னிறைந்தவ னெனவரு ணாலோர்
குலவி யேத்துவோ னெவனவ னுமையொரு கூற்றி
னலர்க றைக்களச் சிவபிரா னடியிணை போற்றி. (க)

வேறு

செவியுற வாங்கி மோகத்
திண்படை சிலையிற் பூட்டுங்
கவிகைவேண் மடியச் சற்றே
கறுத்தியோ குறையும் பெம்மான்
குவிதழை நிறையப் பூத்த
கோழிணர்ப் பதுமச் செங்கே
ழவிர்தரு விழித்தீக் கென்றன்
வினையிலக் காகு மாலோ. (உ)

வேறு

திருமாலின் றிரன்பிரம லுபமனியன் றபனனந்தி
செவ்வே ளாதித்
தருமமுறு குரவருக்குந் தனதருளா லாசிரியத்
தலைமை நல்கி
வருமெவர்க்கு முதற்குருவாய் மெய்ஞ்ஞான முத்திரைக்கைம்
மலரும் வாய்ந்த
வுருவழகுங் குறுநகையுங் காட்டியரு டருஞ்சிவனை
யுளத்தில் வைப்பாம். (௩)

வேறு

எல்லை யில்கலை யென்னுங் கொடிபடர்
மல்லல் வான்கொழு கொம்பரின் வாய்ந்தருள்
கல்வி ஞானக் கடலமு தாயசீர்
பல்கு தேசிகர் பாத மிறைஞ்சுவாம். (௪)

வேறு

மறைமுடிவிற் பயில்கருத்து
மன்னியமெய்ப் பொருள்விருப்புங்
கறைமிடற்றோன் றிருவடிக்கீழ்
மெய்யன்புங் கடுந்துயர்நோய்
பறையவரு மிம்மூன்றும்
பரிந்தியல்பாக் கிடைத்தமன
நிறைவுடையோ ரேவரவர்
நீடூழி வாழியவே. (௫)

வேறு

பசி வன்றன துயர்ச்சியே தெரிப்பதிற்
        பகரொருப் பாட்டிற்று
யரிய கால்கதிர் வியாதனு நியர்மொழி
        யால்விளங் கிடுநீர்த்தாய்த்
திரிவு காட்சிய ருளத்துறு தறிநிகர்
        செம்பொருட் கோவைத்தாய்
விரியு நீருல கினுக்கிதங் தருமுதல்
        வித்தையோங் குகமாதோ. (௬).

வேறு

எட்படுநெய் யெனவுயிருக் குயிரா யெங்கு
        மேகமாம் பசுபதிதா ளேத்துஞ் செய்யுள்
விட்பருமுண் ணிறைந்தபொருட் சுவைய வாகி
        மேலோர்தம் வழிச்செல்லு மருபா னுக்கு
முட்கருத்து வெளிப்படுப்ப விழிந்த மார்க்கத்
        துழல்வோர்தம் பிதற்றுரைகட் கணுகொ ணுத
நட்புடைய வுரையீண்டுச் செய்ய லுற்றே
        னல்வழிச்செல் லறிவாளர் நயக்கு மாறே. (எ)

நூல்

பூர்வபாகம்

நின்பெருந் தன்மை வானவர் தமக்கு
நிகழ்த்தரி தாதலின் மனித
னன்பொடும் வழுத்த விழைந்திடி னதையே
யடைவதற் கையமின் றேனு
முன்பெயர் கருதும் பெருந்தவம் வருவா
யொருவழி யாற்கிடைத் திடுக
வென்பதோர் மதிவந் தென்னையீர்த் தெழுமா
லெங்கணு நிறைந்தபூ ரணனே. (க)

விச்சுவா திகனும் விசுவசே வியனும்
விமலநீ யேயென மறைக
ணிச்சய மாக முழக்கவு மறியா
நீசர்தாம் பிணங்குவ ரந்தோ
மச்சரத் துனக்கே தீங்கிழைத் தவர்தம்
வாழ்க்கையும் பயன்படா தாலத்
துச்சர்சொற் கேட்டோர்க் கிறுதலே தண்டஞ்
சொற்றிடு நூலெலா மன்றே. (உ)

ஏழைய ரிருகாற் பசுக்கண்மற் றிவரா
லியன்றிடத் தக்கதொன் றிலையே
வாழிய நலந்தீங் கறிந்துயி ரியற்ற
வல்லதோ யாங்கணும் விரவிச்
சூழுநீ யெவ்வா றசைத்தனை யவ்வா
றசைதலிற் சுதந்திர மிலதாற்
பாழிமால் விடையா யவ்வுயி ரந்தோ
பழித்திடுந் தகையதொன் றன்றே. (ங)

இதநான் மறையு ளோரொரு விதிவாக்
கியங்களைப் பற்றிநல் வேள்வி
யாதிகண் முயலத் துணிபவ ரெல்லா
வருமறை முடிவினு முழக்கு
மேதகு முனது தலைமையைத் துணியா
தொழிவரோ விளங்கிழை யொருபா
னுதனே யவர்தாம் பரவசத் தினராய்
நணுகில ராயிடின் மன்னே. (ச)

உன்றனை யெதிரே கண்டுமம் புயத்தோ
னுணர்ந்திலன் மால்சொல வுணர்ந்தான்
வென்றிவெள் ளானைப் பாகனு முமையாள்
விளம்பிடத் தேர்ந்தன னிமலா
மன்றலந் துளவோ னயனுட னுன்னுன்
மயக்கறுத் துணர்ந்தன னென்று
மின்றுனை யேழை மானுட ரறியா
ரென்பது மாயவேண் டுவதோ. (ரு)

உன்றிரு வடிக்கீ ழுறுதியா மன்பு
முன்றிரு வருளினுற் கிடைப்ப
தன்றிநூல் பலவு மாய்ந்ததா லுரைசெ
யளப்பருந் திறமையான் மதியான்
மன்றவே கிடைப்ப தன்றுமற் றதனை
மாதவஞ் செய்திலாக் கயமை
துன்றிய புலையோர் யாங்ஙனம் பெறுவார்
சோதியே கருணைவா ரிதியே. (சு)

உலகர்சே ரூறுநிப் பயனெவற் றினுக்கு
முறைவிட மாய்த்துயர் முழுதும்
விலகுறத் துமிக்குங் கனிச்சியா முன்றுள்
விரைமலர்க் கியற்றுமெய்ப் பத்தி
பலகிலாப் பிறவி தொறும்புரி தவத்தா
லல்லதெவ் வாற்றினு மரிதே
நலமதொன் றடைதற் குறுமிடை யூறு
நாதனே பலவுள வன்றே. (எ)

பலவகைப் பவந்தோ றெய்திடுந் தவந்தோர்
படர்ந்தெழு மகத்திருள் கடிந்தோர்
நலமுறு மியம நியமநற் செய்கை
நயந்துளோ ருனைப்பெற முயல்வார்
கலியுறு நவைசே ருளத்தவ ரசுரக்
கடுமையர் ததிசியா திகளா
லலமரச் சபிக்கப் பட்டுளோ ரெவ்வா
றறிவரோ வையநின் றனையே. (அ)

அளவிலுன் பெருமை யறியவு முன்றாட்
கழிவிலா வன்புவைத் திடவுந்
தளமல ரெடுத்துன் னருச்சனை யாற்றிச்
சாலநின் றிருவருள் பெறவும்
வளமலி புலியூ ரம்பலத் தமுதே
மலர்தலை யுலகினுட் சுரும்ப
ருளர்துழாய்ப் படலை மார்புடை யண்ண
லொருவனே வல்லனு மன்றே. (கூ)

சுருதிப்பொரு ளாராய்தல்

தனைப்பிலா நிரதி சயமதாஞ் சச்சி
    தானந்த வடிவமாய்த் துவிதப்
பிணக்கிலி பரமான் மாவெனுந் தகைத்தாய்ப்
    பிரத்தியக் காயுப நிடதத்
திணக்குறு மகண்டப் பொருள்களா லுணரு
    மியல்பதா யனந்தமா யோங்குங்
குணிப்பருஞ் சோதி யாகிநிற் கின்றாய்
    கோதிலாச் சிவபரம் பொருளே. (ய)

குணங்களைக் கடந்தோ யெனினுமா யையினைத்
    தோய்தலாற் குணமுடை யவன்போ
லணங்கொரு பாலுங் கறைமிடற் றழகு
    மம்பக மூன்றுமா முருக்கொண்
டிணங்குறு நாமஞ் சிவன்பவன் முதலா
    வியைந்தய னரியரன் மூன்று
முணங்கிடா வுலகை நடாத்துவோ னாகி
    யோங்கினை நீங்கரும் பொருளே. (கக)

அதர்வசிகை

முளரியோன் முதலாஞ் சுரரெலாம் பூத
    முதலவற் றோடுதித் துள்ளோ
ரளவிடுந் தலைமை யாளரென் றவரை
    யகற்றிமால் விடையவ நினையே
வளமுறு மெல்லாத் தலைமையு முடையோன்
    வருமுதற் காரண னல்லோ
ருளமுறு தியானப் பொருளெனச் சிகைதேர்ந்
    துரைப்பவு மயங்குவர் சிலரே. (கஉ)

மறையகத் தெல்லாத் தலைமையோ டொருபால்
வகுத்திடுங் கேவல மதுதா
னிறைவனே யிவ்வா றம்புயன் முதலோ
ரினும்பிரித் துத்தியால் விளக்கா
தறைதரு மிதனுன் முரா னுழி வேறோ
ராற்றினுற் போக்கவற் றுமற்
கறைமிடற் றடக்கி யேமைழவா னவரைக்
காத்தருள் கருணைமா கடலே. (கங)

கதித்தெழும் பொருளா லுனைவிளக் கிடுங்கா
ரணபத மனுவதிப் பென்னுப்
பொதுக்குணம் பொதுச்சொற் பற்றியே தொடக்கம்
புகல்பொருண் மாயவன் றானே
யிதற்கெனத் துணியா திறுதியும் வலியா
லிம்முறை யேற்றிமற் றொருவ
னதிர்ப்புற மருளின் மருளுக பிறரு
மந்நெறிப் படருமா றெவனோ. (கச)

சுவேதாச்சுவதரம்

தற்பரா வுலகுக் காதிகா ரணந்தான்
றலைமையி லுயிருடன் சடத்தைச்
சொற்றிடிற் பழுதாற் பிரமமா மெனவே
துணிந்துபின் பிரமமா ரென்றாய்
வுற்றிடு மான்றோ ருமையரு ளோக்கா
லுணர்ந்தனர் நீயென வென்னு
வற்புறச் *சுவேதாச் சுவதர மென்னு
மறைமுடி வுரைத்திடு மன்றே. (கரு)

---

* சுவேதாச்சுவதரந் தமது என்பதும் பாடம்.

படைப்புறு முறைமை சொலற்கெழுஞ் சுருதிப்
பரப்பெலாம் பிறிதொன் றன் பொருட்டாய்க்
கிடைத்தலா லவற்றுட் காரண பதத்தைக்
கிளத்தலாந் தன்பொருள் படாமை
விடைக்கொடி யாயின் டீசனென் றரனென்
றெடுத்துமெய்க் காரணந் துணிதற்
கடுத்தெழு மொழியுந் தன்பொருள் படாதே
லாவினித் துணிவென்ப தெங்கே. (கசு)

இதனுளெப் போது தமமது பகலன்
றென்னுமந் திரமுனே யுணர்த்தி
விதமுறு மேனைக் காரண மொழிகள்
யாவுநின் பாலுறச் செலுத்தி
மதமுறு மருளோ ரவற்றினைப் பிறர்மேல்
வகுப்பதைப் பயன்படா தாக்கு
மதனுடல் பொடிப்ப நுதல்கிழித் தெழுந்த
வாளெரி காட்டிய முதலே. (கஎ)

மனுவிதிற் சிவச்சொல் வேறுள சுருதி
யாம்புரோ வாதத்திற் றெரிக்கும்
புனிதமாம் பொருளே சாற்றிடு மெனிலெப்
போதினு மாதிகா லத்தை
யனுவதித் துன்ற னுண்மையை விதியா
தாயின்மற் றென்செயப் புகுந்த
தினியபே ரின்பத் தண்ணருள் கொழிக்கு
மெம்பிரா னிந்தமந் திரமே. (கஅ)

பெரிதுமா னத்தா லுயர்ந்தவள் பிறரைப்
பேசிடா வரன்சிவன் முதலா
மரியநின் னுமக் குருமணிக் கோவை
யாலுடன் முழுதலங் கரித்தாள்
கரியவற் கரியாய் நின்னொடொப் பவரே
கருதினு மிலையெனத் துணிந்துன்
திருவடிக் கேதன் கருத்தெலா மமைத்தாள்
சிருப நிடதமா மிவளே. (௧௯)

புருடசூத் தத்தின் மந்திர மிதனுட்
பொருந்தினு முனைக்குறித் திடும்பல்
சுருதியா னியமித் ததனையெவ் வாறு
தூக்குமிம் மறைமுடி வதாஅன்று
திருவுருத் திரத்து மந்திரம் பலவுஞ்
சிறப்பவீண் டுறுதலா லறியாக்
குருடர்தா மதனாற் றுணிவது தகுமோ
கோமளக் குணப்பெருங் கடலே. (௨௰)

உருத்திர மனுக்கள் முன்னரும் பின்னும்
முரைக்குமீண் டாதலா லிவைதாந்
தெரித்துற விளக்கு நின்றிருப் பெயராற்
சிறத்தலா லுருத்திர மோதல்
கருத்தனு முனக்கே நிச்சயித் ததனாற்
கதம்பயி லெறுழ்விடைப் பாகா
வருத்தியா லவற்றை யுரைத்ததே யீண்டைக்
களந்தறிந் திடச்செய்யு மெமக்கே. (௨௧)

உரைக்குமீ சானச் சுருதியாற் றெரிக்கு
முன்னிடத் தெய்துமென் பதுவே
பொருத்தமாம் புருட சூத்தத்தின் முடிவு
புனைமலர்க் கருங்குழல் பாகா
விருப்புறு மேனோர் பூசனை விதியுள்
விளம்பினு மவ்விதிக் கேற்பக்
கருத்துறும் பொருட்டுப் பொருள்விரித் தறவோர்
காட்டினு மிதுவழுப் படாதே. (உஉ)

அதர்வசிரசு

அனைத்துயிர் களுமாந் தன்மையும் விண்ணோ
ராற்றொழு தகைமையு மானே
யுனக்குரைத் தயன்மான் முதலியோ ருனது
விபூதியென் றோதியுன் பெயர்கட்
கினப்பொரு ளுரைக்குங் கடமையா லுன்ற
னிறைமையே குறித்துநின் பெருமை
சினத்தொகை யகலத் தேற்றுமா லதர்வ
சிரோபநி டதமுழு வதுமே. (உங)

நின்றுழி நின்று முடிவுகொள் ளாது
நீமறைந் தமைசொலுங் கிளவி
யுன்றனிக் கூற்று முடிவிடத் துய்த்துக்
கொண்டுகூட் டிடுந்தகைத் தாயுந்
தன்றன திடத்தே முடியுமீண் டெனுமிச்
சழக்குரை தேர்ந்திடிற் றலைவா
புன்றொழிற் கயவர் தமதறி யாமை
புலமையாய்ப் பரிணமித் ததுவே. (உச)

ஈண்டுநீ யாரென் றுன்னுருக் கடாவு
மிமையவர்க் கேனையோ ருருவை
யாண்டுநீ யிருத்தா யெனில்வழு வாகா
தடுக்குமோ நீயுயிர்க் குயிராய்க்
காண்டக நிறைந்து மவனென யாரைக்
கழறுவ தோபெரு கன்பு
பூண்டவர்க் கெளியாய் கயவருக் கேனும்
பொருந்துமோ விச்சழக் குரையே. (உரு)

அனைத்தினும் பிரமந் தனக்கிட் டான
மறையுமந் திரங்களி னுனு
முனற்கரும் பரிதி மண்டலத் துறையு
மப்பொருட் குமைவிழி களிப்ப
மனக்கொரு வடிவஞ் செவியறி வுறுக்கு
மனுக்களி னுனுமெய் யடியா
ரினத்தனே நீயே யெங்கனு முறைவோ
னென்பதை யறியலா மன்றே. (உசு)

ஐம்பெரும் பூத மிருசுட ரான்மா
வன்றிவே றுலகில்லை யவைதா
முன்பெரு வடிவ மெனப்படு மன்றே
யோர்ந்துளோர்க் கிங்கது தன்னு
லெம்பிரா னீயே நிறையதிட் டாதா
வென்பதற் கையமு முளதோ
வம்பரா மூர்க்கப் பேய்கடா மயக்கான்
மாறுபா டுறப்பிதற் றுவரே. (உஎ)

கைவல்லியம்

மலைமக டுணைவன் முக்கண னீல
மணிமிடற் றவனென வானோர்
திலகனே யுன்னைத் தகாமாங் குகையுட்
டியானஞ்செய் திடுமுறை செப்பி
யலாவன் முகுந்த னீசனோ டெவையு
மையநின் விபூதியென் றுரைக்கு
மலவிரு டுமித்துச் சிவச்சுடர் விளக்க
வந்தகை வல்லிய மறையே. (உஅ)

தைத்திரியம்

மிகுமது சுருதி கூறுமுன் றகர
வித்தையை வேறுள விசேடப்
பகுதிக ளானுந் தயித்திரி யந்தான்
பகர்ந்திடும் வள்ளலே மாயோ
னகமுறு பொருளா யுனைத்தியா னிப்பா
னவன்றனை நடுவனோ திடுமவ்
வகையறி யாத பேதைகண் மயக்கான்
மற்றொரு வாறுகொள் ளுவரே. (உகூ)

பிருகதாரணியாதி

மறைகளிற் றலைமை யெய்திய பிருக
தாரணி யம்முதன் மறைகள்
பிறவுநல் லிதயத் துறுபொரு ளாமுன்
பெருமையே பேசிடு மன்றே
யறவனே யிவற்றின் கருத்தெலா முன்பா
லடைவதே நியமமென் றுரைப்பார்
திறனறிந் துயர்ந்தோ ராதலாற் கயவர்
தீமொழி யாற்பய னென்னே. (௩௰)

மாண்டுக்கியம்

தன்பொருள் விரிக்கும் பிறசுரு தியினுற்
 றன்கருத் தறிதருந் தகைத்தா
நின்புடை யெல்லா முதன்மையு முண்மை
 நிகழ்த்துமாண் டுக்கிய சுருதி
யுன்கழ றருமீ சானமா மனுவோ
 டுருத்திரோ பநிடத மனுக்க
ளென்பவு மேனை மனுக்களு மநேக
 மிம்முறை விளங்கவோ திடுமே. (௩க)

அறப்பெருங் கடலே யளவிலா வணக்க
 மறைந்திடு மெண்ணிலா மனுக்கள்
பிறர்க்குரித் தாகாச் சிறந்ததோர் பெருமை
 பேசிடும் வெளிப்படை யுனக்கே
கறைப்பெரு மிடற்றாய் சூத்திரர் முதலோர்
 காலினும் விழுந்திடு மூர்க்கர்
குறித்துனை வணங்கக் கூசுவ ரந்தோ
 கொள்ளுவ ரோதெரிந் தவரே. (௩௨)

மொழிந்திடு மெல்லா வணக்கமு மெல்லா
 மொழிகளு முன்னையே சாரு
மிழிந்திடாத் திருமா லாதிவிண் ணேரை
 யீன்றவன் றானுநீ யெனவே
பொழிந்தசி ருனது தலைமையே யெடுத்துப்
 புகழ்ந்துநின் பெருங்கணத் தலைமை
விழைந்துளோர் தமது பெருமையுஞ் சால
 விளக்கிடுஞ் சுருதிகள் பலவே. (௩௩)

உ த் த ர பா க ம்

புராணங்கள்

எண்ணிலாச் சாகைக் குவால்களாற் றெரித்திங்
கெம்மனோர் மாசறத் தெளிய
நண்ணிய நியாய வொழுங்குக ளானு
நவன்றுறத் தேற்றுநின் பெருமை
பண்ணவா விளங்கப் புராணங்க ளெல்லாம்
பன்முறை யுணர்த்திடு மன்றே
கண்ணிலாச் சிறுவர் தமக்குமுள் ளங்கை
நெல்லியங் கனியெனும் படியே. (௩௪)

பாரதம்

நின்பதாம் புயத்தி னருச்சனை யாற்று
நெறியினன் மாயவ னெனவு
மன்புறு மீசன் மாலயன் றனக்கு
மாதியங் கடவுணீ யெனவு
மின்புறக் கிளக்கும் பாரதந் தானு
மெந்தைநின் றலைமையே விரிக்கும்
புன்புலை யேற்குந் தண்ணருள் புரிந்த
பூரணா னந்தமா கடலே. (௩௫)

இராமாயணம்

அகந்தைநோ யறுக்கு மயனரி யாற்கு
மாதியாம் பகவனீ யெனவு
மகஞ்செய விரும்பு மிராமனுன் னிடத்து
வைத்திடுங் குறிப்புரை யதனாற்
றிகழ்ந்தவச் சுவமே தத்தினல் வழுத்துந்
தெய்வநீ யென்னவும் விளக்கி
யுகந்தவான் மீகி செய்தகாப் பியமு
முன்புக ழேவிரித் திடுமே. (௩௬)

மிருதியோக நூல்கள்

பெரும்பெயர் மனுயோ கிச்சுரன் முதலாம்
 பெரியருஞ் சாத்திரந் தெரித்த
விரும்பதஞ் சலியார் முதலியோர் தாமு
 மேனையோர்க் குரியபல் பேதம்
விரும்புபல் வழியுங் காட்டியா வருக்கு
 மேற்பட நினைப்புகழ்ந் துரைப்பார்
கரும்பனைக் காய்ந்த கடவுளே யிதனைக்
 கண்டுமந் தோமயங் குவரே. (௩௭)

வேதாந்த சூத்திரம்

பிறநய மாகும் புருடனங் குட்டப்
 பிரமிதி தனைவிரும் பாம
லறவனே யுனதி சானநற் சுருதி
 யாற்பர மென்றுநிச் சயித்தோன்
செறியும்வே தாந்தப் பொருளினைத் தெரிக்குஞ்
 சூத்திரஞ் செய்தவன் கருத்து
மிறைவநின் பெருமை கண்டதே யாகு
 மென்பரா லாயவல் லவரே. (௩௮)

கீதைகள்

பெருவழக் காகக் கிதைக ளகத்துப்
 பேசுமோந் தத்துசத் தென்னு
முறைதரு பதமும் பிரமமென் பதமு
 முணர்த்திடும் பொருளுநீ யென்றே
தெரிதரக் காட்டுஞ் சாத்திரங் களினும்
 வெளிப்படத் தெரிந்தன மையா
விரிதரு நீயே யுலகினுக் கெல்லா
 மேற்படுந் தெய்வமென் பதுவே. (௩௯)

ஈசானுதி சுருதிகளாற் சிவபிரான் பெருமையை நிலைநிறுத்துதல்.

உனையலா லெல்லா விறைமையு முடையோ
னென்றுமற் றெவன்றனை யுரைப்பே
முனிவிலீ சான முதலிய சுருதி
மொழிப்பொரு டானுநீ யன்றே
யனையன யிவைதாஞ் சமாக்கியை சுருதி
யலவெனு மயங்கிருட் குகையுள்
வனைபுகழ் வேதத் துபயநூ றோர்ந்த
மதியினோர் மதியகப் படாதே. (சு0)

பலபல விடத்துஞ் சுருதியி லுனையே
பகர்ந்திடும் புராணமு மிவ்வா
றிலகுறத் தெரிக்கும் விச்சுவா திகனென்
றிப்பெயர் சிற்பரா வெல்லா
வுலகினுக் கதிக னீயெனப் பகுத்து
வெளிப்படத் தெளியவற புறுத்திக்
கலகஞ்செய் பொல்லாக் கயவர்தஞ் செவிக்குங்
கடுங்கனற் சலாகையா மன்றே. (சுக)

சிவபிரானது நிரதிசய ஐசுவரியத்துவம் நிலை நிறுத்துதல்

இறைமையிவ் வாறு பகுத்திடத் தகாதே
லுனையொழிந் தியாண்டுமுற் றுறுமோ
முறைபெறு மண்டந் தொறுமய னரன்மான்
மூவரும் வேறுவே றாகிப்
பிறழுறுங் கற்பந் தொறுநவ நவமாய்ப்
பிறந்துநின் னாணையி னடங்கி
யுறைவரே யாதி யந்தமு மின்றி
யொழிவற நிறைந்தவான் பொருளே. (சுஉ)

விஷ்ணு பாகுரதி முதலியவற்றின் பிராபல்ய நிரசம்

வைப்பெனப் பெறுமுன் பெருமையே முழக்கு
மறைகளும் பலபல மறைதே
ரப்பொருள் விரிக்கும் புராணமு மவ்வா
ருருமிவ் வளவினுற் ருனே
செப்பிடத் தகுமா னின்பெருந் தகைமை
தேருநர்க் கிதுவன்றி வேறு
மெய்ப்படு மளவை வேண்டுமோ வேண்டா
விளங்கிழைக் கிடங்கொடுத் தவனே. (சஙு)

பிறர்க்குரித் தல்லாப் பெயர்களான் மறைகள்
பிஞ்ஞகா நாரனன் மேன்மை
குறித்துரைத் திடுமா லேனைவின் னவர்க்குக்
கூறிடா திம்முறை யிதனுன்
மறைப்பொரு ளுண்மை தெரியலா மென்னு
மந்திரோ பநிடத முதலாந்
திறப்படு மறைக ளோதிடாக் கயவர்
செப்பிடு முரைபயன் படாதே. (சச)

சிவபுரான தாமசத்துவ நிரசம்

தானுமா லயற்குத் தம்முளே யுயர்ச்சி
தாழ்ச்சிகூ றிடும்புரா ணங்கட்
கேனுறுங் கற்பப் பிரிவினுற் போக்கென்
றியம்பிடு மச்சபு ராண
மாணலா ரிதனைச் சிவபுரா ணத்துக்
கப்பிர மாணமோ துவதா
காணிலா துரைத்துத் தமதறி யாமை
காட்டுவர் நாடரும் பொருளே. (சரு)

நாராயண காரணத்துவ பரகுநதி யுபபத்தீ

உன்னிறை மையினை முகுந்தன நிடத்து
முவனவ தாரங்க ளிடத்துந்
தன்னுடைக் கூறு மொற்றுமை யதனுற்
சாற்றிடு மாரண மொழிக
ளின்னதிவ் வளவே யவற்றினுள் ளுறையென்
றியம்புவ ரருந்தவ முனிவர்
மன்னனே யிதனைத் தேறிட மாட்டார்
மயக்கமாங் கடலழுந் துவரே. (சசு)

மாயவ னின்பா லேகனுய் முன்னர்
வந்துதித் தனன்பின்ன ரவன்றன்
பாயுல கொடுக்கும் புருடனை யயனைப்
படைத்தனன் முந்துகா லத்தென்
றேயுறு மகோப நிடதமோ திடுவ
தியாததை நின்னிடத் துருதா
லோய்விலா துருகி யுள்ளவல் லவர்க
ளுள்ளகத் துறைமணி விளக்கே. (சஎ)

திரிமூர்த்தி பலத சாமிய நிருபணம்

அறுக்குமோர் கற்பத் தயனெரு கற்பத்
தரியொரு கற்பத்தி லான்முன்
பிறப்பனுன் பான்மற் றிருவரை முன்னேன்
பெற்றளித் திடுவன்மற் றிதனு
லுறப்பெறு முயர்ச்சி தாழ்ச்சிக ளொருவர்க்
குள்ளதோ வில்லையென் றிவ்வா
றிறப்புறு மறைகண் முழுவது முணர்ந்தோ
ரியம்புவ செம்பெரு மானே. (சஅ)

சிவபிரானது பெருமையை நிலைநிறுத்துதல்

ஆங்கொரு சாரா ரயனரி யிருவர்க்
குருத்திர னதிகனு மெனவு
மீங்கிவர் தம்பா லவன்பிறந் தானென்
பதுமவன் கூற்றினுக் கெனவு
மோங்குமால் விடையா யுன்னுரு நாம
மொப்புமை செய்கைமற் றெல்லா
நீங்கிடா துடையோ னுதலான் மேலாய்
நிற்பவ னெனவுமோ துவரே. (சகூ)

சிவபிரானது விசுவசேவியத்துவ நிருபணம்

தேவர்மூ வருக்குந் தலைமையொப் புமைதான்
செப்புக வன்றிமற் றிவருண்
மேவரு மேலோ னுருத்திர னெனத்தான்
விளம்புக வெந்தவா றேனுங்
காவல நீயே யாவர்க்கு மேலாங்
கடவுளென் பதுபெரு வழக்கே
யோவுறு துலகெ லாம்பணி செய்யு
மொருவனீ யாகிநின் றனையே. (ரு௰)

உலகெலாம் பணிசெய் திடத்தகுந் தலைமை
யொருவனீ யேயிது வறியாக்
கலதிகள் வறிதே போக்குவர் வாணாள்
கடையனேற் கருள்பசு பதியே
சுலவுதே வருக்கு மானுடர் போலச்
சுராசுரர் மானுடர் முதலாம்
பலவுயிர் களுமுன் பணிவழி நிற்றற்
பாலன பசுக்கள்போ லன்றே. (ருக)

மானிடர் தருமப் பெருமைதேர்ந் துரைக்கு
மாதவர் நின்னிடத் தன்பு
மானிடந் தரித்தோய் தருமமார்க் கத்துட்
சிறந்தெடுத் தெண்ணிய வாற்றான்
மானிடப் பிறப்பைப் பெற்றுஞ்செய் வினையின்
வயத்தராய் நினக்கன்பு செய்யா
மானிடப் பதர்கட் கெந்தவா றேனும்
வருங்கதி கண்டிலன் யானே. (ருஉ)

இருபிறப் பாளர் நியதியாய் வழுத்தற்
கெடுத்தல்கா யத்திரி யன்றே
வருமதற் குயர்ந்த தெய்வநீ யென்றே
வழுத்திடு மிதுபெரு வழக்கே
மருவரும் பொருளே யாதலி னுன்றாள்
வழிபடா விருபிறப் பாளர்
புரியுநல் வினைக ளியாவையும் புனையுந்
தூசிலா வணியெனப் படுமே. (ருங)

விப்பிரர்க் கெல்லா மங்கியிற் றெய்வ
மேவுமென் றுந்தழற் கடவுட்
கொப்பிலா நீயே யந்தரி யாமி
யென்னவு முயர்மறை மிருதி
செப்பிடும் வசன மிவ்விரு வகையுந்
திரண்டுநீ யடியனே னரகிற்
குப்புறு தருள்வோய் விப்பிரர் தமக்குக்
குலதெய்வ மெனவிளக் கிடுமே. (ருச)

வேதியர் குலத்திற் பிறந்தவர் தமக்கு
விசேடமா யிக்கலி யுகத்தில்
வேதநீ தெய்வ மெனப்புரா ணங்கள்
விளம்பவு மன்பினு னுன்றன்
பாதநா மரையை வழிபடா தேனைப்
பண்ணவர் தமைவழி படுவோர்
பாதக மறையோர் மூடர்க ளவர்க்குப்
பயன்றரா பரதெய்வங் களுமே. (ருரு)

எந்தைநீ பொறுமை யுடையவன் கருத்துக்
கெளியவ னுன்னருள் கையில்
வந்தது போலுன் னடியர்க்கு விரைவின்
வாய்த்திடு மவர்பெறும் பேறுஞ்
சிந்தைவேட் டதற்கு மேற்படப் பெறுவர்
தேர்ந்திடின் முழுதுமுன் னுடைமை
யிந்தவாய் மையினுற் பயன்குறித் தவர்க்கு
மீண்டுநீ சரணெனத் தகுமே. (ருசு)

இம்மையிற் போக முனைவழி படுவோர்க்
கெண்ணரும் பெருமைய தென்ப
ரம்மையி லேனை யுள்ளன நிற்க
வண்ணலே யுன்னனு சார்க
டம்முடைப் பதமு மரியயன் முதலோர்
தம்பதங் களுக்குமே லாகச்
செம்மைதேர்ந் துரைப்ப ராகமத் துறையிற்
றிளைத்துமெய் யுணர்ந்தமா தவரே. (ருஎ)

நிகழ்பிர கிருதி கடந்தமெய் வாழ்வா
        நிரதிச யானந்த மதுவுந்
திகழுநின் னருளாற் பெறுவதாம் பிறவித்
        தீயநோ யறுக்குநன் மருந்தே
புகலிதற் கேது மெய்ப்பொரு ளுண்மை
        போதிக்கு ஞானமா மதுவு
மகவிடத் துனது திருவருள் கிடைத்தா
        லல்லது கிட்டுறு தன்றே. (ருஅ)

வருந்திடா வகைவேட் டதனின்மேம் பட்ட
        பயன்பெற வுதவிட வற்றுந்
திருந்துநின் வழிபா டொருதலை யாகச்
        செய்யவேண் டிடுந்தகைத் தாயும்
பிரிந்துனை நீத்து வேறொரு தெய்வம்
        வழிபட நாடுவர் பேயோ
ரருந்தவப் பொருளே வெய்யவூழ்க் கொடுமை
        விலக்குத லரிதரி தந்தோ. (ருக)

மருளினு லவிச்சை யாலவாத் தன்னுன்
        மதாபிமா னங்களால் வறிதே
யொருவுக வாணு ளுனைத்தொழா மூர்க்க
        ரொருவனே யாங்களெல் லோமுந்
திருமகன் மனைவி முதலியோ ரோடுஞ்
        சேரநின் னடியராய்த் தொழுதேம்
பெரிதுமிம் மதியே பெயர்ந்திடா திருக்கும்
        பேறளித் தருள்கமற் றெமக்கே. (சுய)

வேறு.

பயன் முதலியன

இவ்வாறு முப்பா னிரட்டிப்படு செய்யு ளாலுன்
செவ்வா னடியிற் சிவதோத்திர மாலை சேர்த்தே
னிவ்வாய் மையினித்த மொர்காலிதை னைப்ப டிப்போ
ருய்வா னுனநின் னருள்கூடுக வும்ப ரானே. (க)

வேறு.

விண்ணோர் தமக்குந் தெரிவருநின்
மேன்மை யெங்கே யானெங்கே
தண்ணார் துதியென் றிதுவுமொரு
குற்றந் தானுய்ச் சமைந்ததா
லண்ணு வன்புக் கெளியாயா
னவாவாற் செய்தே னதவினை
யெண்ணு தெல்லாம் பொறுத்தருள்வா
யென்னு மிதுவென் றுணிபாமே. (உ)

வேறு.

யானே யறிவே னிவனையெனத் தன்ற னுவா
லானு வரியே புகன்றுனெனி லந்த நின்சீர்
தேனு மமுதே யினிமற்றெவர் தேற வல்லார்
கோனு யுயிர்தோ றுறையம்பலக் கூத்து ளானே. (ங)

சிவதத்துவவிவேகம்

முற்றிற்று.

திருச்சிற்றம்பலம்

அரும்பொருள் விளக்கம்

பாயிரம்

க. கூற-பகுதி. அலகு-அளவு. ஆற்றல்-சக்தி. அலகிலாற்றல் - அலுப்தசக்தி. அருள் நூல் - வேத சிவாகமங்கள். குலவுதல்-கொண்டாடுதல். அவன் சிவபிரான் என்க. கறை-கறுப்பு: நஞ்சுமாம். களம்-கழுத்து.

உ. செவியுற வாங்குதல்-நாண் செவிவரை வருமாறு இழுத்துப்பிடித்தல். மோகத்திண்படை-மோகனாஸ்திரம். சிலை-கருப்புச்சிலை. கவிகை - குடை: இங்கே சந்திரனாகிய குடை. வேள் - மன்மதன். கறுத்தி - கோபித்தாய். யோகு - யோகம். யோகுறையும் பெம்மானென்றது சனகாதி நால்வருக்கும் அநுபவஞானத்தையுணர்த்தி வீற்றிருந்த ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தியை. பெம்மான்-விளி. கோழ்இணர்-கொழுமையான பூந்தாது. கேழ்-நிறம்.

௩. தபனன்-சூரியன். ஆதியென்றதனால் சுவாயம்புவமனு, வாயு, வசிஷ்டர், பராசரர், வியாசர், காசிபர் முதலியோர் கொள்ளப்படுகின்றனர். மெய்ஞ்ஞான முத்திரை-சின் முத்திரை. குறுநகை-புன்சிரிப்பு.

இங்ஙனம் சிவவணக்கம் மூவகைப்படுத்தோதியது சிவபெருமான் தனது சந்நிதிக்கண் உலகத்தைச் சேட்டிப்பிப்பவனென்பதை

யும், உயிர்கள் தாஞ் செய்த வினைக்கீடாக ஒன்றனை யறிதற்கண் தான் காட்டாகி நிற்பவனென்பதையும், உயிர்கள்போல அசத்தை யனுபவியா னென்பதையுங் குறித்து நிற்குமென்று சிவஞான சுவாமிகள் அருளிச் செய்திருக்கின்றார்கள். (சிவஞானபாடியம். ⅠⅠ வது சூத்திரம். உ வது அதிகாணம்.)

ரு. கொழுகொம்பு - கொடிபடர்வதற்குத் துணையாக நடப் படும் கொம்பு. கல்வி-விஞ்ஞானம். தேசிகர்-மகாகுருக்கள்.

௬. மறை முடிவு-உபநிடதம். பறைதல்-நீங்குதல்.

௬. ஒருப்பாடு-ஒரே கருத்து. முதல்வித்தை-வேதம். கால் கதிர் வியாதனுதியர் மொழி யென்பதிற் கால்மொழி யென்றது வாயுசங்கிதையையும், கதிர்மொழி யென்றது ஆதித்திய புராணத் தையும், வியாதன்மொழியென்றது மகாபாரதத்தையுங் குறித்து நின்றன. வாயுசங்கிதை மகாபுராணங்களையும் ஆதித்தியபுராணம் உபபுராணங்களையும் உபலக்கணத்தாற் குறிக்கும். ஆதியென்றத ஞல் மிருதி கற்பசூத்திரமுதலியன கொள்ளப்படும். வேதம் சிவபெருமானது பரத்துவத்தைக் கூறுவதில் ஒரே கருத்துடை யது: வாயு சூரியன் வியாசன் முதலியோர் மொழிகளால் விளங் குந் தன்மையது: திரிவுகாட்சியர் மனத்திற் பதிக்கப்பட்ட தறி போன்று திகழும் செம்பொருட் கோவையை யுடையது: அத் தகையதாய் உலகிற்கு நன்மைதரும் வேதம் எங்ஙனும் பிரகாசிப்ப தாக என்பது செய்யுட் பொருள்.

எ. எட்படுநெய்-எள்ளிலுள்ளநெய். விட்பரும்-சொல்லுதல் அரிய. அறுபான்-அறுபது. வெளிப்படுப்பச் செய்யலுற்றேனென முடிக்க. நயத்தல்-மகிழ்தல்.

நூல்

பூர்வபாகம்

க. விழைதல்-விரும்புதல், தவ வருவாய்-தவமாகிய இலாபம். ஈர்த்தல்-இழுத்தல்.

உ. விச்சுவாதிகன் - உலகினை யிறந்து நின்றோன். வேதம் 'விச்வாதிகோ ருத்ரோ மஹர்ஷி:' என்று கூறுகின்றது. விசுவ சேவியன் - உலகத்தாரால் வணங்கப்படுந் தன்மையுடையோன். வேதம் 'சிவ ஏகோ த்யேய:' என்று கூறுகின்றது. மச்சரம்-பொறாமை. அழிகுலத்திற் பிறந்தோர் சிவபெருமானைப் பரி கசிக்கின்றனரெனப் பாகவதத்திற் கூறப்படலானும் அப்பிறப்பினை யுடையோர் நல்லோராற் சமுதாயத்தினின்றும் நீக்கப்பட்டுக் குற்சித ஜீவனம் செய்தல் காணப்படலானும் 'மச்சாத் துனக்கே திங்கிழைத்தவர் தம் வாழ்க்கையும் பயன்படா' தென்பது கூறப் பட்டது. துச்சர் - கீழ்மக்கள். நூலெலாம் - பாகவதம் கூர்ம புராணம் பாத்மபுராண முதலியன.

௩. வாழிய-அசை. பாழி-வலிமை.

௪. விதிவாக்கியம்—மந்திரம் அருத்தவாதம் விதிவாக்கிய மெனப்படும் வேதப்பகுப்புக்களுள் ஒன்று. வேள்வி முதலியன செய்தற்கண் இச்சோதக வாக்கியங்களே சிறந்த பிரமாணங்களாம். விளங்கிழை-உமாதேவியார். பரவசம்-அந்நியர்வசம்.

௫. அம்புயத்தோன்-பிரமன். மயக்கு-மயக்கம். பிரமதேவர் சிவபெருமானை எதிரே கண்டும் உணராதிருந்தமையும் விஷ்ணு மூர்த்தி சிவபெருமான் கூற உணர்ந்தமையும் இலிங்கம், கூர்மம், சௌரம் என்னும் புராணங்களிற் கூறப்பட்டன. இந்திரன் உமா தேவியா லுணர்ந்தானென்பது தலவகார உபநிடதத்திற் கூறப் பட்டது.

௬. மன்ற-உறுதியாக. கயமை - கீழ்மைக்குணம். வாரிதி-கடல்.

எ. விலகுதல்-நீங்குதல். துமித்தல்-வெட்டுதல். கனிச்சி-கோடரி. சிவபெருமான் திருவடிப்பத்தி பல பிறவிகளிலுஞ் செய்த தவமுடையார்க்கே யாகுமென இச்செய்யுள் கூறுகின்றது.

அ. பவம்-பிறவி. அகத்திருள்-அஞ்ஞானம். அலமரல்-சுழலுதல். ஆதி யென்றது பிருகு முதலியோரைக் குறித்து நின்றது. முன்னைப் பல பிறவிகளிலும் மேலான தவங்களைச் செய்தவர்களும், மனத்திலுள்ள அறியாமையை நீக்கினவர்களும், இயமம் நியமம் முதலிய நற்காரியங்களைச் செய்தவர்களுமே சிவபெருமானை யடைய விரும்புவார்கள்: இவ்வாறாகக் கலியின் குற்றம் பொருந்தியவர்களும், அசுரக் கொடுமை யுடையவர்களும், ததீசி முதலியோராற் சபிக்கப்பட்டவர்களுமாகிய பிறர் சிவபெருமானை யெவ்வாறடைவார்களெனச் சிவபெருமானை யடைவார்க்குரிய தகுதியும் அப் பெருமானை யடையாதார்க்குரிய தகுதி யின்மையும் விளக்கப்பட்டன. ததீசி முதலியோராற் சபிக்கப்பட்டமை கூர்ம புராணம், காந்த புராண முதலியவற்றிற் கூறப்பட்டது.

௯. தளம்-இலை. புலியூர்-சிதம்பரம். சுரும்பர் உளர் துழாய்ப் படலை-வண்டுகள் சுழல்கின்ற துளசிமாலை. சிவபெருமானது பெருமையை யறிதற்கும் அப்பெருமான்பால் அன்பு செய்தற்கும் அப்பெருமானை அருச்சித்து அருள் பெறுதற்கும் திருமாலொருவரே தகுதி யுடையாரென்பது கூறப்பட்டது.

௰. தணப்பு-நீக்கம். நிரதிசயமதாஞ் சச்சிதானந்த வடிவம்-தன்னின் மிக்கது வேறொன்றில்லாத சத்துச் சித்து ஆனந்தமாகிய வடிவம். துவிதப் பிணக்கிலி - அத்துவிதமாயுள்ளவர். அது 'தத்துவமசி' 'அகம்பிரமாஸ்மி' 'அயமாத்மா பிரம' 'பிரஞானம் பிரம' என்று சொல்லப்படும் மகா வாக்கிய விஷயம். பிரத்தியக்கு-வேறுபட்டது. குணித்தல்-அளவிடல்.

௰௧. அம்பகம்-கண். உணங்கிடா வுலகு-கெடாத உலகம். சிவபெருமான் மாயையைத் தோயானென்பதே வேத சிவாகமங்களுட் கூறப்பட்ட வுண்மை. முதனூலாசிரியராகிய அப்பதீக்கிதர்

சிவாத்துவிதமாகிய நிமித்த காரண பரிணாமவாத சமயத்தினராதலின் தங் கொள்கையை இங்கே கூறினர். **சிவஞான சுவாமிகள்** முதனூலை அசர்ப்பட மொழிபெயர்த் தருளுகின்றமையின்

‘ மூக்குணங்களின் மூவரைத் தோற்றி
மூவருக்கு முத்தொழில் வகுத்தருளி
யக்குணங்களுக் கதீதமாய் நிறைவா
யத்துவாக்களைக் கடந்த மேலுலகிற்
றக்க நற்கண நாதரேத்தெடுப்பச்
சத்தி யம்பிகையுட னருளுருவாய்த்
தொக்க கோடிசூரிய ருதயம்போற்
றோன்றிநின்றனை கலைசை வானவனே ’

என்னுந் தமது சித்தாந்தக் கருத்துப் பற்றி அதனைத் திரியாது முதனூலாசிரியர் கூறியவாறே கூறியருளினார்கள். முன் வரும் ‘வேதாந்தப் பொருளினைத் தெரிக்கும் சூத்திரம் ’ (செய்யுள்-௩அ.) என்றதற்கும் இஃது ஒக்கும்.

௰௨. இது முதல் மூன்று செய்யுட்களால் **அதர்வ சிகோபநிடதப்** பொருள் ஆராயப்படுகின்றது. முளரி-தாமரை: முளரியோன்-பிரமன். சிகை-அதர்வசிகை யென்னும் உபநிடதம். இவ்வுபநிடதம் ‘பிரமன் முதலிய தேவர்கள் அனைவரும் பூதங்களோடு பிறக்கின்றார்கள். ஆதலின் அவர்கள் காரணரல்லர் ’ என்று விலக்கிச் ‘ சர்வைசுவரிய சம்பந்நன் சிவபெருமானே : அவரே முதற்காரணர். அவரொருவரே தியானிக்கப்படுபவ’ ரென்று கூறுகின்றது.

௰௩. ஒரொருபால் - ஒவ்வோரிடம். அற்கறை-கரிய விடம். வேதத்தில் ஒவ்வோரிடத்தில் ஒவ்வொரு தேவருக்கு எல்லாத் தலைமையும் சொல்லப்படும். ‘ பதிம் விச்வஸ்யாத்மேச்வரம் ’ என்று **நாராயணோபநிடதத்திலும்** ‘ அக்நிர்வை தேவாநாம் அவமோ விஷ்ணு : பரமஸ் ததந்தரேண ஸர்வா அந்யா தேவதா :’ என்று **வேத விருசப் பிராமணத்திலும்** ‘ அக்நயே ப்ருதிவ்யதிபதயே

ஸ்வாஹா' என்பதுமுதல் 'ப்ரஹ்மணே லோகாதிபதயே ஸ்வாஹா' என்பது வரையுள்ள மந்திரங்களால் அக்கினி, சோமன், வாயு, சூரியன், இந்திரன், யமன், வருணன், குபேரன், மகாசேனன், உருத்திரன், பிரமனென்பவர்களுக்கு முறையே பிருதிவி, நக்ஷத்திர, அந்தரிக்ஷ, தியு, சுர, பிரேத, சலில, யக்ஷ, சேநா, பூத, லோகங்களுள் ஒவ்வொன்றிற்கு அதிபதியாந்தன்மை கூறிப் பின் 'விஷ்ணவே ஸர்வாதிபதயே ஸ்வாஹா' என லோகாக்ஷி கிருகியத்திலும் விஷ்ணுமூர்த்திக்குக் கூறப்பட்ட பெருமையும், 'இரணிய கருப்பன் ஆதியிலுள்ளவன்' என்றும், 'இந்திரன் சகலத்தினும் மேலான தேவன்' என்றும், 'அக்கினியே தேவரனைவருக்கும் முன்னே தலைவன்' என்றும், சுருதிகளில் பிரமன், இந்திரன் அக்கினி யென்பவர்க்குக் கூறப்பட்ட பெருமையுமாகிய எல்லாம் சுருங்கிய பொருள்படும்; அதர்வசிகையிற் கூறப்பட்டவாறு ஏனையரிற்பிரித்துத் தலைமை சொல்லாமையால். அன்றியும் இச் சுருதியே அவற்றின் மாறுபாட்டை நீக்குவதாயு மிருக்கின்றது.

'காரெழில்புரையுமேனிக் கண்ணனை யென்னை மற்றை
யாரையும் புகழும் வேத மான்றனைத் துதித்ததேபோ
லோருரை விளம்பிற்றுண்டோ வுரைத்தது முகமனென்றே
பேருலகறிய முன்னும் பின்னரும் விலக்கிற் றன்றே'

எனப் பிரமதேவர் தக்கனுக்குக் கூறியதாக வருங் கந்தபுராணச் செய்யுட் கருத்தும் இது.

௰௪. கதித்தல்-சிறத்தல். தொடக்கம்-உபக்கிரமம். இறுதி-உபசங்காரம். அதிர்ப்பு-ஆரவாரம்.

உனை விளக்கிடுங் காரணபதம்-அதர்வசிகையிலே முதற்கண் 'மிகவுந் தியானிக்கத்தக்க ஈசானனைத் தியானிக்க' என்று கூறிப் பின் 'காரணன்றான் தியானிக்கற்பாலன்' என வருவதிலுள்ள காரண னென்னுஞ் சொல். அனுவதிப்பு-வழிமொழிதல். இச் சொல் அனுவாத மென்றும் இதற்குப் புரோவாதமாவது சுபாலோபநிடத முதலியவற்றில் சிருட்டிப் பிரளய நிருபணப் பிர

கரணங்களிலே பேசப்படும் நாராயண சப்த காரணனென்றும் சிலர் கூறுவர். அவர் அதர்வசிகையின் தொடக்கத்தில் 'எவன் தியானிக்கப்படும்?' எனப் பொதுவகையால் எழுந்த வினவுக்குக் 'காரணன்றான் தியானிக்கற்பாலன்' எனப் பொதுவகையால் விடையிறுக்கப்பட்ட தென்பர். முன் வாக்கியத்திற் கூறிய தியானிக்கப்படும் பொருளெனப்பட்ட 'ஈசான' னென்னும் பதம் பின் வரும் 'காரண' னென்னுஞ் சொல்லுக்குப் புரோவாதமா யிருக்கவும் அதனைவிடுத்து மற்றொரு சுருதியைக் கூறல் பொருந்தாது. அன்றியும் அபரிமிதாதிகரண நியாயத்தினாலே இவ் வுபநிடதத்திற் சமீபத்திற் கூறிய பிரம விஷ்ணு உருத்திர ரென்னும் மூவருக்குங் காரணராகிய ஈசானரை அக் காரணச்சொல்விளக்குகின்றது. சுபாலத்தில் அவ்வாறு கூறப்பட்டிலது. இதனானும் அவர்கூற்றுப் பொருந்தாது.

மேற் செய்யுளுக்கும் இச் செய்யுளுக்கும் அப்பதீக்கிதர் செய்த வியாக்கியானத்தை ஆறுமுக நாவலரவர்கள் பெரியபுராண சூசனத்திற் சிவபரத்துவங் கூறுமிடத்து மொழிபெயர்த் துரைத்தார்கள்.

௰௫. இதுமுதல் எட்டுச் செய்யுட்களால் சுவேதாச்சுவதரோபநிடதப்பொருள் ஆராயப்படுகின்றது. தலைமையில் உயிர்-சுதந்தரத் தன்மையில்லாத ஆன்மா. வன்பு-வலிமை. இவ்வுபநிடதம் மகரிஷிகள் ஒருங்குகூடி உலகத்திற்கு ஆதிகாரணம் ஆன்மா வென்றேனும் சடமாகிய பூதங்களென்றேனும் கூறில் அது பழுதாகும்: ஆகவே பிரமமே ஆதிகாரணமெனத் தெளிந்து அப்பால் அப்பிரமந்தான் யாவரென் றாராயத்தொடங்கி உமாதேவியார் அருளால் சிவபெருமானே பிரமமென் றறிந்தனரெனக் கூறுகின்றது.

௰௬. படைப்புறு முறைமை-உலகத் தோற்றத்தின் முறை. பிறிதொன்றன் பொருட்டாய்க் கிடைத்தலால்-பொதுச் சொல்லாய்ப் பிறிதொன்றன் பொருளுடையதாய்க் காணப்படலால்: அஃதாவதுபிரமம் ஆகாய முதலிய சொற்களாயிருத்தலால். விளத்தல்-சொல்லுதல். ஆ-இரக்கக் குறிப்பு. ஈசபதம் க. அ. லும் அரபதம் க. ௰. லும் வருகின்றன.

௰எ. 'எப்போது தமம் அது பகலன்று' என்னும் மந்திரமாவது :—"யதா தமஸ் தந் ந திவா ந ராத்ரிர் ந ஸந் ந சாஸச் சிவ ஏவ கேவல : தத‌க்ஷரம் தத்ஸவிதுர்வரேண்யம் ப்ரஜ்ஞா ச தஸ்மாத் ப்ரஸ்ருதா புராணீ" என்பது. (சுவேதா. ௪. ௰அ.) உனையுணர்த்துதலாவது:—'சிவ ஏவ கேவல' என்றது. மருளோர்-மயக்க வுணர்வுடையோர். நுதல்-நெற்றி. வாளெரி-பிரகாசம் பொருந்திய நெருப்பு.

௰அ. மனு-மந்திரம். மனு இதில்-இந்த மந்திரத்தில். புரோவாதம்-முன் மொழிதல். இங்கே புரோவாத மென்றது சுபால உபநிடத வாக்கியம். சிலர் 'எப்பொழுதிருளிருந்த' தென்னும் மந்திரம் குறித்த ஓர் பொழுதையிருளின் அனுவாத மென்பர். அஃதங்ஙனமன்று : இருண் மாத்திரையானே வரைசெய்யப்பட்ட சிருட்டியின் முற்பொழுதைக் குறிப்பதாகும். ஒன்றை அனுவதித்து மற்றொன்றை விதிக்க வெழுந்த வாக்கியம் அனுவாதத்திற்கின்றியமையாது வேண்டப்படும் புரோவாதத்தாற் பெறப்படாத பொருளில் முடிவு பெறுவிடிற் பயன்படாது. சிவபதம் நாராயணனை யுணர்த்துமெனின் புரோவாதத்தாற் பெறப்படாத பொருளின்மையின் இவ்வாக்கிய முழுவதும் பயனில் கூற்றாய் முடியும். எம்பிரான்-விளி.

௰௯. மானம்-கற்பு. பேசிடா-பேசிடாமல். குரு-நிறம். சுவேதாச்சுவதரமாகிய பெண் கற்பால் மிகச் சிறந்தவள்: அவள் ஏனைத் தெய்வங்களைக் கூறாமல் அரன் சிவன் முதலிய உன்னுடைய பெயராகிய மணி வடங்களால் தன்னுடல் முழுதும் அலங்கரித்திருக்கின்றாள் ; அன்றியும் உன்னோடொப்பவர் யாருமில்லை யென்று தெளிந்து உன்றிருவடியிலே தன்கருத்தெல்லாம் அமைத்தாளாதலின்.

௨௰. இதனுள்-சுவேதாச்சுவதர உபநிடதத்துள். சுவேதாச்சுவதரம் ௩. ௰௪, ௰௫ புருடசூக்த மந்திரங்கள். பல் சுருதி-பிருகதாரணியகம், சாந்தோக்கிய முதலியன. துரக்கும்-நீக்கும். சுவேதாச்சுவதரம் ௩. ௫, ௬ திருவுருத்திர மந்திரங்கள். புருடசூக்தமே

சிவபரமென்பது முன் உ௨-வது செய்யுளிற் கூறப்படும். புருட சூக்தம் நாராயணபரமென்று கொள்ளினும் பல சுருதிகளால் அறுதியிடப்பட்ட பொருளை இஃதெவ்வாறு நீக்கும் : அன்றியும் இவ்வுபநிடதத்தில் திருவுருத்திர மந்திரங்கள் பலவும் வருதலின் பரர்கொண்டவாறு புருடசூக்த மொன்றுனே இவ்வுபநிடதம் நாரா யணபரமெனக் கோடல் பொருந்தாதென்பது இதன் பொருள். கோமளம்-மனமகிழ்ச்சி தருவது.

உக. இச் செய்யுளிற் சுவேதாச்சுவதர உபநிடதம் சிவபர மென்பதற்கு மூன்று காரணங்கள் கூறப்படுகின்றன. அவைதாம் (க) இவ்வுபநிடதத்தில் முன்னும் பின்னும் திருவுருத்திர மந்திரங் கள் பயிலுதல் (உ) இத்திருவுருத்திரம் சிவநாமங்களாற் சிறத்தல் (௩) திருவுருத்திரம் சிவபரமாக விநியோகிக்கப்படுத லென்பன வாம். கதம்-செல்லுதல். எறுழ்விடை-வலிய இடபம். அருத்தி-அன்பு. ஈண்டை-ஐயீற்றுடைக் குற்றியலுகரம்.

உஉ. புருடசூக்தம் சிவபரமென்பதற்கு 'உதாம்ருதத் வஸ்யேசாந:' எனவரும் ஈசானபதமே சான்றாகும். அமிர்தத் திற்கு ஈசானனன்றோ என்பது அதன் பொருள். கருங்குழல்-உமாதேவியார். புருடசூக்தம் நாராயணமென்னும் பெயரான் வழங்கப்படலானும், அதில் விஷ்ணுவுக்குரிய புருட சப்தம் பயின்றுவருதலானும், அது விஷ்ணுபரமாகப் பிரயோகித்த லுண்மையானும் விஷ்ணுபரமே யெனச் சிலர் கூறுவர். புருட சூக்தம் நாராயணமெனப்பட்டது நாராயணன் இருடியாதல்பற்றி யல்லது தெய்வமாதல்பற்றி யன்றென்பது 'நாராயணனுற் காணப் பட்ட புருடசூக்தத்தால்' என வாதூல சூத்திரத்து வருதலா னறியப்படும். புருடசப்தம் ஆன்மாவையும் மான்வனையுங் குறிக்கு மென அபிதானகோசங் கூறுதலானும், உலகவழக்கினும் வேத வழக்கினும் அவ்வாறே பயின்று வருதலானும் அது 'நாராயண னையே குறிக்குமென்றல் பொருந்தாது. புருடசூக்தம் சிவபரமாகப் போதாயன சூத்திரத்தில் விநியோகித்தலும், இலிங்கபுராணத்தில் சிவபூசாவிதியில் தேவவிரத முதலியவற்றோடு விநியோகித்தலும்

காணப்படுகின்றது. மேலும் ஒரு கடவுளைக் குறிக்கும் மந்திரம் சத்தவொப்புமையாற் பிறதேவர் மேலுஞ் செல்லும், அருக்கனைத் தெய்வமாகவுடைய இருக்கு விசுவதேவ சத்தவொப்புமையாற் பிதிரர்மேலும் புஷ்யசத்த வொப்புமையாற் பூடணதேவர் மேலுஞ் செல்லுதல்போல. இவற்றான் மேற் கூறப்பட்ட காரணங்க ளனைத்தும் பொருந்தாமை காட்டப்பட்டது.

உ௩. இதுமுதல் ஐந்து செய்யுட்களால் **அதர்வ சிரோப நிடதப்** பொருள் ஆராயப்படுகின்றது. விபூதி - அம்சம். சிவ பெருமான் அனைத்துயிர்களுமாய்க் கலந்து நிற்குந் தன்மையும் அப் பெருமான்து தேவர்களாற் றொழப்படுந்தன்மையும் முதற் கண்டத்திற் கூறப்பட்டன. பிரமன் விஷ்ணு முதலியோர் சிவ பெருமானது விபூதி யென்பது இரண்டாங்கண்டத்திற் கூறப் பட்டது. சிவபெருமானது பிரபாவம் அப் பெருமானது திரு நாமங்கள் பலவற்றிற்கும் பொருள் கூறுமாற்றால் மூன்றாவது கண்டத்திலும் நான்காவது கண்டத்திலுங் கூறப்பட்டது.

உ௪. நின்றுழி-நின்ற இடம். கிளவி-சொல். சழக்குரை-பொருந்தா உரை. பரிணமித்தல்-மிகுந்து வெளிப்படல்.

அதர்வசிரசின் முதற்கண்டத்தில் தேவர்கள் சிவலோகஞ் சென்று சிவபெருமானை நோக்கி நீர் யார் என்று வினவச் சிவ பெருமான் 'நான் ஒருவனே முதற்கணிருந்தேன்' என்பது முதலாக விடைகூறி மறைந்தனர். பின்னர்க் கடவுளர் உருத்தி ரனைப் பார்த்திலர் என்ற விஷயம் கூறப்படுகின்றது. அதில் இரண்டாவது வாக்கியத்தில் 'அவன் அந்தரத்தின் அந்தரத்தைத் தலைக்கூடினான் : திக்கினந்தரத்தையுந் தலைக்கூடினான்' என்பது முதலியன கூறப்படுகின்றன. சிலர் இவ் வாக்கியத்தில் வரும் அவ னென்பது உருத்திரனைக் குறியாது அவனுக்கு அந்தரியாமியா யுள்ள நாராயணனைக் குறிக்குமென்றும், உருத்திரனைக் குறிக்க வேண்டின் நானென்று வழங்க வேண்டுமென்றும், முதல் வாக் கியம் பின் வாக்கியத்திற் கேற்ப நாராயண விஷயமாகுமென்றுங்

கூறுவர். 'அவனந்தரத்தின்' என்ற வாக்கியம் நின்றாங்கு நின்று முடிதல் கூடாமையின் பின்வரும் 'வாய்மையை வாய்மையால்' என்பது முதலிய வசனமனைத்தும் இறுதிக் கண் அந்நுவயமாகும்; முன் வாக்கியங் கூறிய அனந்தரம் சிவபெருமான் தேவர்களுக்குப் புலப்பட்ட தனது நூலத்திருவுருவை யொழித்து அதனினுஞ் சிறந்ததும் அனைத்தினுள்ளும் புகுந்ததும் மறைந்ததும் நிறைந்தது மான சொரூபத்தைத் தலைக்கூடினனென்று அவனது மறைதலைக் கூறுதற்கண் பொருட் காற்றல் உளதாதலால். இனி முன் பின் முரணுமிடத்து முற்படும் உபக்கிரமமே வலியுடையதாகும். இவற்றால் அவர் கூற்றுப் பொருந்தாமை காட்டப்பட்டது.

உரு. 'நீர் யார்' என்ற வினவிற்கு விடையா யெழுந்த சிவபெருமான் வசனம் மற்றொருவர் விஷயமாயின் வினவும் விடையுந் தம்முண் மாறுபட்டு வழுவாகும்: அன்றியும் சிவபெருமான்றான் உயிர்க் குயிராய் நிறைந்து நிற்பவனாதலின் அப் பெருமான் 'அவ'னென வேறு யாரையுங் கூறுதல் பொருந்தா தென்பது இச் செய்யுளின் பொருள். கடாவுதல்-வினவுதல். ஏனையோர் உரு-மற்றையோர் வடிவம். காண்டக-அழகாக. கழறுதல்-சொல்லுதல்.

உசு. சுவேதாச்சுவதா உபநிடதத்திலும் உருத்திர உபநிடதத்திலும் சிவபெருமானுக்கு எல்லாப் பொருள்களிலும் அதிட்டானம் கூறப்பட்டது. சூரியமண்டலத்துறையும் பொருள் சிவபெருமானே யென்பது 'நமோ ருத்ராய பசுபதயே மஹாதேதேவாய த்ரியம்பகாயை கசராதிபதயே ஹரயே சர்வாயே சாநாயோக்ராய வஜ்ரிணே க்ருணிநே கபர்திநே நமோ நம; ஸூர்யாயாதித்யாய நமோ நம: நமோ நீலக்ரீவாய சிதிகண்டாய நமோநம: நமச்சந்த்ர லலாடாய க்ருத்திவாஸஸே நம:' என்பன வாதியாக வரும் மந்திரங்களால் அறியப்படும். கூர்மபுராணத்துச் சூரிய இருதயத்தும் இது கூறப்பட்டது. அதிட்டானம்-நிறைவு. உனற்கு-நினைத்தற்கு. களிப்ப - களிக்குமாறு. மனக்கு - அத்துச்சாரியையின்றி வந்தது. செவியறி வுறுத்துதல்-சொல்லுதல்.

உஎ. ஐம்பெரும்பூதம் - மண், புனல், தீ, காற்று, வெளி யென்பன. இருசுடர்-சூரியனும் சந்திரனும். ஆன்மா-உயிர். இவை யெட்டும் சிவபெருமானுடைய அஷ்ட மூர்த்தங்கள். அதிட்டாதா-அதிட்டிப்பவன். பிதற்றுதல்-பயனின்றிப் பல கூறல்.

உஅ. இச் செய்யுளால் கைவல்லியோபநிடதப்பொருள் ஆராயப்படுகின்றது. திலகன்-திலகம் போன்றவன்: சிறந்தோன். தகராமங் குகையுள் தியானஞ்செய்தல் தகரவித்தையென்று கூறப் படும். முகுந்தன்-விஷ்ணு. ஈசன்-இங்கே உருத்திரன்.

உக. தைத்திரியத்தில் தகரவித்தை விஸ்தாரமாகக் கூறப் பட்டிருக்கிறது. அது சுருதி-அச்சுருதி: அஃதாவது கைவல்ய உபநிடதம் தைத்திரியத்தில் நாராயணனை நடுவிலோதியது அந் நாராயணன் தன்னுடைய இருதயத்தில் சிவபெருமானைத் தியானிக்கின்றா னென்பதை யுணர்த்துதற்பொருட்டு. நாராயண அனுவாகத்தில் 'ஸஹஸ்ரசீர்ஷம் தேவம்' என்பது முதல் நாராயண னுடைய மகிமையைக்கூறிப் பின் 'பத்மகோசப்ரதீகாசம்' என்பது முதல் அவனது உபாசனஸ்தானமாகிய இருதயதாமரையின் விசேடங்கூறிப் பின் 'தஸ்ய சிகாயாமத்யே பரமாத்மா வியவஸ்தித' என்பது கூறப்பட்டது. நடுவண்-இடை.

கூ0. மறை - வேதம்: மறைந்த பொருளை யுடைமையின் வேதம் மறையெனப்பட்டது. பிருகதாரணியம் முதல் மறைகள்-பிருகதாரணியம் சாந்தோக்கியம் மகோபநிடத மென்பன. பிருக தாரணியத்தில் 'யஏஷோ அந்தர்ஹ்ருதய ஆகாசஸ் தஸ்மிந் சேதே' என்பதுமுதல் தகரோபாசனை கூறப்பட்டது. சாந்தோக்கியத் தில் 'அத யதிதமஸ்மிந் ப்ரஹ்மபுரே தஹரம் புண்டரீகம்' என்பது முதல் தகரோபாசனை கூறப்பட்டது. மகோப நிடதவாக்கியம் உக - வது செய்யுளுரையிற் கூறப்பட்டது. இதயம் - இருதயம். அறவன்-தருமசொரூபி. நியமம்-முறை. திறன்-தன்மை: இங்கே அம்மறைகளின் தன்மை.

கூக. தகை-தகுதி. மாண்டூக்கிய உபநிடதம் வைசுவாநர, தேசச, இரணியகருப்பர்களை முறையே தூல, சூக்கும, சூக்குமதா

மூர்த்திகளாகச் சொல்லிச் சிவபெருமானைத் துரியமூர்த்தியாகச் சொல்லுகிறது. இவ்வுண்மை உத்தரதாபிநி உபநிடதத்தால் விளங்குகிறது. பிரசுருதி-உத்தரதாபிநி உபநிடதம். ஈசானமாமனு-'ஈசாநஸ் ஸர்வ வித்யாநாம்' என்னும் மந்திரம். உருத்திரோப நிடதம்-சதருத்திரீயம். ஏனை மனுக்களென்றது-ஆயுஷ்யசூக்தம், சிவ சங்கற்ப முதலியன.

கஉ. வணக்கத்தைச் சொல்லும் அளவில்லாத மந்திரங்கள் மற்றைத் தேவர்களுக்கில்லாத பெருமையை உனக்கே வெளிப் படையாகச் சொல்லுகின்றன. வணக்கஞ் சொல்லு மந்திரங்க ளாவன அதர்வசிரசு, உருத்திராத்தியாயம், தேவவிரதம் முதலியன.

கங. 'ஸ்தோமம்வோ அத்யருத்ராய' 'யஸ்மை நமஸ் தஸ்மை த்வாஜுஷ்டந்நியுநஜ்மி' என்பன வாதியாகவரும் மந்திரங் களால் சிவபிரானையே வணக்கங்களெல்லாம் சாரும் என்பது பெறப்படும். எல்லா மொழிகளும் சிவபிரானையே சாருமென்பது இலிங்க முதலிய புராணங்களில் விளக்கப்பட்டது. விஷ்ணு முதலிய தேவர்களை யீன்றோன் சிவபிரானென்பது 'ஸோம: பவத:' என்னும் மந்திரத்தாலும் 'ஏக: புரஸ்தாத்ய' என்னும் ஆயுஷ்ய சூக்த மந்திரத்தாலும் பெறப்படும். சிவகணநாதர்களின் பெருமை சாமவேதத்துள்ள தேவவிரத முதலிய மந்திரங்களிற் கூறப்பட்டது.

உத்தரபாகம்

கச. சாகை - வேதப்பகுதி. குவால் - கூட்டம். எம்மனோர்-எம்போன்றவர்கள். நுவன்று-சொல்லி. உறத்தேற்றும்-நன்றாகத் தேறச்செய்யும். கண்-அறிவு. சிவபெருமானுடைய பெருமையை வேதங்கள் பல சாகைகளால் கூறி நியாய முறைகளாலும் தெளி விக்கும். புராணங்கள் அப் பொருள்களையே சிறுவரும் அறியு மாறு விளக்கும் என்பது செய்யுட் பொருள்.

கூ௫. பதாம்புயம் - திருவடித்தாமரை. ஆற்றுதல் - செய்தல். புலையேன் - இழிவுடையேன். விஷ்ணுமூர்த்தி சிவபூசை செய்பவ ரென்றும் உருத்திர விஷ்ணு பிரமாக்கள் ஆகிய மூவருக்கும் ஆதி கர்த்தா சிவபெருமானே யென்றும் கூறிச் சிவபரத்துவத்தைப் பாரதம் வெளியிடுகிறது. சௌஷுப்திக பர்வத்துச் சிவவசனம் துரோணபர்வத்து வியாசவசனம் முதலியவற்றால் விஷ்ணுமூர்த்தி சிவாராதனம் செய்தமை அறியப்படும். சாந்திபர்வவசனம் அநு சாசனிக வசனம் முதலியவற்றால் பிரமா விஷ்ணு முதலியோர்க்கு ஆதிகர்த்தா சிவபெருமா னென்பதறியப்படும்.

கூ௬. அயன் - பிரமன். மகம் - யாகம். வழுத்தும் - துதிக்கும். வான்மீகி செய்த காப்பியம் - இராமாயணம். யுத்தகாண்டத்து ஆதித்திய இருதயத்தில் மூவருக்கும் ஆதி பகவன் சிவபிரானென் பது கூறப்பட்டது. உத்தர ராமாயணத்தில் அசுவமேதத்தால் வழிபடப்பெறுந் தெய்வம் சிவபெருமா னென்பது விளக்கப் பட்டது.

கூ௭. பெயர்-புகழ். மனுவாற் செய்யப்பட்ட நூல்-மனுஸ் மிருதி. யோகீச்சுராராற் செய்யப்பட்ட நூல்-யோகயாஞ்ஞிய வல் கியம். பதஞ்சலியாற் செய்யப்பட்ட நூல்-யோகசூத்திரம். கரும் பன்-மன்மதன்.

கூ௮. வேதாந்தப் பொருளினைத் தெரிக்குஞ் சூத்திரம்- பிரமசூத்திரம். அதனைச்செய்தவர்-வியாசமுனிவர். வியாசர் வேதத் தில் ஓரிடத்தும் காணப்படாத பரிணாம விஷயத்தைத் தாம் செய்த பிரம சூத்திரத்திற் கூறியிருக்கின்றார். அது வேத விரோதமாயி னும் சிவஞான சுவாமிகள் அப்பதீச்கிதர் கருத்தையே மொழி பெயர்த்துரைத்தருளுகின்றமையின் அவ்வாறே யோதியருளினார் கள். இதனால் சிவஞான சுவாமிகள் பிரம சூத்திரத்தைச் சித் தாந்த சைவப் பொருள் கூறும் நூலாகக் கொண்டார்களென்று கூறுதல் பொருந்தாது. ஸ்ரீ பாஷ்யத்தில் சுவாமிகள் இதனை ஏகான்ம வாதநூலென் றெடுத்துக்கின்றமையால் இஃதறியப்படும். மேல் ௰௪-ஞ் செய்யுளுரையும் பார்க்க. பிரம சூத்திரத்தில் 'சப்தா

தேவப்ராமித:' என்று வருஞ் சூத்திரம் உபநிடதங்களில் வழங்கும் புருஷ சப்தம் ஆன்மாவைக் குறிக்குமா அல்லது சிவபெருமானைக் குறிக்குமா என்று ஆராய்ந்து 'அங்குஷ்ட மாத்ர புருஷ: மத்ய ஆத்மநி திஷ்டதி' என்னு மந்திரத்தில் ஈசான சப்தம் வருதலின் அது சிவபிரானையே குறிக்குமென்று கூறியிருக்கும் விஷயம் இங்கே கூறப்பட்டது. பிறநயமாகும் புருடன்-ஆன்மாவாகிய மற்றைப் பொருளையுங் குறிக்கும் **புருஷபதம்**. அங்குட்டப் பிரமிதி-அங்குட்ட மாத்திரமென்று சொல்லப்பட்ட அளவையால் அளக்கப் படுதல்.

௩௩. பெருவழக்கு - மிகுதியாக வழங்குதல். சாத்திரங்களினும்-சாத்திரங்களினாலும். கீதைகளிற் பெருவழக்காகச் சொல்லப் படுவது 'ஓம் தத் சத்' என்பது. இவற்றாற் குறிக்கப்பட்டவர் சிவ பெருமானே யென்பது தைத்திரீயோப நிடதத்தில் 'சிவோமே அஸ்து சதாசிவோம்' எனவும் 'தற்புருஷாய வித்மஹே' எனவும் 'புருஷோ வை ருத்ரஸ்ஸந்மஹ' எனவும் வரும் மந்திரங்களால் அறியப்படும். பிரமபதமும் சிவபெருமானையே குறிக்குமென்பது அதர்வ சிரஸில் வரும் 'அத கஸ்மாத் உச்யதே பரம்ப்ரஹ்ம' என்னும் மந்திரத்தாலும், அதர்வ சிகையில் வரும் 'ஸர்வாணிப்ரும் ஹயதிதிப்ரஹ்ம' என்னும் மந்திரத்தாலும் அறியப்படும். இலிங்க **புராணம் ஆதித்தியபுராணம் பாரதம்** முதலியவற்றாலும் இவ் வுண்மை யறியலாகும்.

௩௪. இதுமுதலிரண்டு செய்யுட்களால் ஈசானன் ஈசன் ஈசுவரன் விசுவாதிகனென்னும் பதங்களை யாராய்ந்து சிவபெருமானது முதன்மை கூறப்படுகிறது.

எல்லா விறைமை-எல்லாத் தலைமை. ஈசான முதலிய சுருதி-ஈசானனென்றும் ஈசனென்றும் ஈசுவரனென்றும் வரும் வேத மந்திரங்கள். அனையனுய்-தாய்போன்றவனே. சமாக்கியை-குறியீடு: அஃதாவது காரணத்தால் வரும் பெயர். இது மீமாஞ்சை நூலில் மூன்றும் அத்தியாயத்திற் கூறப்பட்டது. "ஸமாக்யா யௌகிகீஸம்ஞ்ஜா" என்பது மீமாஞ்சை வாக்கியம். வேதத்து

பயநூல்-வேத சிவாகமங்கள். சிவாகமமும் வேதமெனப்படும். அது சிவஞான சித்தியார் அ-ம் சூத்திரம், உய-வது செய்யுளுக்குச் சுவாமிகள் அருளிச் செய்த உரையா லறிக. அவ்விரு நூல்களையுந் தெளிந்த அறிவுடையோரது புத்தி மீமாஞ்சகர் கூறும் அதனுள் அகப்பட்டு மயங்காது என்பது இதன் பொருள். மயங்கு இருட் குகையென்றது மீமாஞ்சகர் கூறுவதாகிய 'இவை சமாக்கியை; சுருதியல' என்பது.

௩௧. உனையே பகர்ந்திடும்-உன்னையே விச்சுவாதிகனென்று சொல்லும். புராணமும் இவ்வாறே விளங்கும்படி கூறும். அத் தன்மையதாகிய விச்சுவாதிகப்பெயர் நீயே உலகத்திற்கு அதிக னென்று வெளிப்பட விளக்கிப் பரதெய்வ உத்கர்ஷம் சொல்லு வார் செவிகளுக்குக் காய்ச்சிய இருப்புச் சலாகைபோன் றிருக்கு மென்பதாம்.

௩௨. இறைமை-தலைமை: அஃதாவது நிரதிசய ஐசுவரியத் தன்மை. நவம்-புதுமை. பிரம விஷ்ணு ருத்திரர் மூவருஞ் சிவ பெருமான் ஆணை வழி நிற்பவர். ஒழிவற-நீக்கமின்றி. வாயு சங் கிதை, ஆதித்திய புராணம், கூர்ம புராணம், வாசிட்ட இராமா யணம், இலிங்கம், ஸ்காந்தம் பாரதம் முதலியவற்றுள் பிரமாதி மூவரும் கற்பந்தோறும் வேறு வேறாய்ப் பலவாறு பிறந்து சிவ பிரான் ஆணை வழி நிற்பார்களென்பது கூறப்பட்டது.

௩௩. வைப்பு-கருவூலம். மறைகள் பலவாவன-அதர்வசிகை முதலிய பல உபநிடதங்கள். வேதந்தேர்ந்த அப்பொருளை விரிக் கும் புராணங்களும் பல. இங்கே குறிப்பிட்டது புராணங்கள் பதி னெட்டனுள் சிவபுராணங்கள் பத்து என்னும் மிகுந்த எண்ணு டையன வென்பது. பிரபாச கண்டத்தில் புராணங்கள் பதினெட்ட னுள் நான்கு திருமாலையும் இரண்டு பிரமனையும், இரண்டு சூரி யனையும் மிகுந்த பத்து சிவபிரானையும் புகழும் என்பது கூறப் பட்டது. உண்மையறிவார் இவ்வெண்மிகுதியொன்றானே உன் பெருமையை யறிவார். அவர்க்கு வேறு அளவைகள் வேண்டா

என்பதாம். தருமால்-ஆல் அசை. மெய்ப்படும் அளவை-உண்மையை யறிவிக்கும் பிரமாணம். விளங்கிழை-உமாதேவியார்.

௪௪. பாஞ்சராத்திரிகள் வேதம் ஏனையோர்க்கு உரிமையில்லாப் பெயர்களால் விஷ்ணுவின் பெருமையைக் கூறும்: ஏனையோரை அவ்வாறு கூருது: இதனுல் வேதக்கருத்துத் தெரியலாகு மென்று கூறுவர். சுவேதாச்சுவதரம் அதர்வசிகை அதர்வசிரம் முதலிய உபநிடதங்களை அவர் ஓதி யுணர்ந்தாராயின் அவ்வாறு கூருரென்பது இதன் கருத்து.

௪௫. தாணு-சங்காரருத்திரன். எண் - சிறப்பு. போக்கு-மாறுபாடு நீக்கம். ஆணலார்-பேடிகள். சங்காரருத்திரன் ஏனை யிருவரினு மேம்பட்டோ னென்றும் விஷ்ணுமூர்த்தி ஏனை யிருவரினும் மேம்பட்டோ னென்றும், பிரமன் ஏனை யிருவரினும் மேம்பட்டோ னென்றும் வரும் புராணவாக்கியங்கள் கற்ப வேறுபாடுபற்றிப் பொருத்த முடையன வென்று மச்சபுராணங் கூறுகின்றது. இதனையுணராத பாஞ்சராத்திரிகள் இம்மச்சபுராண வாக்கியத்தாற் சிவபுராணங்களுக்கு அப்பிரமாணத் தன்மை கூறப்பட்டதெனக் கூறுவர். அது பொருந்தாமை ஸ்ரீ சிவஞான பாடியத்தில் முதற் சூத்திரத்து இரண்டாம் அதிகாரணத்திற் கூறப்பட்டது. அன்றியும் அவர் மூவர்க்குங் காரணனும் துரியனுமான பரமசிவனுக்கும் சங்காரவுருத்திரனுக்கும் வேறுபாடறிகிலர்.

௪௬. முகுந்தன்-விஷ்ணு. உவன்-சுட்டுப் பெயர். தன்னுடைக்கூறு-சிவபெருமானுடைய விபூதி. சிவபெருமானது சர்வகாரணத்துவ முதலிய மகிமைகளைத் திருமால்மீது ஏற்றிக் கூறியது திருமால் சிவபெருமானுடைய விபூதியாதல் பற்றியென நாராயண காரணத்துவ பரசுருதிகளின் உபபத்தி இச் செய்யுளாற் பெறப்பட்டது. ஆரணம்-வேதம். உள்ளுறை-உட்பொருள். ஸ்ரீ அரதத்தாசாரியர் 'நாராயணனைப் பரப்பிரமமென்றும் பரஞ்சோதியென்றும் பரதத்துவமென்றுங் கூறுதல் மலைவாம் பிறவெனின்-அற்றன்று: மாந்திரிகன் கருடபாவனையாற் கருடனோடத்துவிதமாய் நின்றவழி அக்கருடனென்றே கருதப்படுதல்போல நாராயணன் சிவ

பாவனையாற் சிவபிரானோடத்துவிதமாய் நின்றவழி யங்ஙன முபசரிக்கப்பட்டானாகலின் மலைவு யாண்டையது என்க' என்றருளிச் செய்து நாராயண காரணத்துவ பரசுருதிகளின் உபபத்தி விளக்கியருளினார்கள். ஆரண மொழிகளென்றது உபலக்ஷணத்தால் புராண முதலியவைகளையும் உணர்த்தும்.

சஎ. மகோபநிடதத்தில் 'நாராயண னொருவனே முதற்கணிருந்தான்: பிரமா இருந்திலன். ஈசான னிருந்திலன்.' என்று தொடங்கி 'அவன்பானின்று பிரமன் தோன்றினன் சூலபாணியாகிய புருடன் தோன்றினன்' என்பதாதியாகக் கூறப்படும் தோற்றம் சர்வ காரணனாகிய பரமசிவனை வந்தடையாது. அவ்வாக்கியம் 'பிராதுராஸீத் தமோநுத' என்று வரும் மானவ புராண வசனத்திற் கேற்பச் சிருட்டியின் றொடக்கத்தில் பிரமன் உருத்திரன் முதலியோர் உதித்தற்கு முன்னர்த் துணையிலியாய் நாராயணன் பிறந்தானென்று பொருள்படும். சங்காருத்திரனுக்கும் பரமசிவனுக்கும் வேறுபாடு அதர்வசிகை முதலியவற்றிற் கூறப்பட்டது. ஒப்விலாது-இடைவிடாது. உள்ளுதல்-தியானித்தல். மணிவிளக்கு-இரத்தினதீபம்.

சஅ. ஒரு கற்பத்தில் அயன் பரமசிவன்பானின்றும் முதற்கட்டோன்றி ஏனை யிருவரையுந் தோற்றுவிப்பன்: மற்றொரு கற்பத்தில் விஷ்ணு பரமசிவன்பானின்றும் முதற்கட் டோன்றி ஏனை யிருவரையுந் தோற்றுவிப்பன்: பின்னொரு கற்பத்தில் உருத்திரன் பரமசிவன் பானின்றும் முதற்கட் டோன்றி ஏனை யிருவரையுந் தோற்றுவிப்பன்: இதனான் இம்மூவருள் உயர்ச்சி தாழ்ச்சி யில்லையென்று வேத முணர்ந்தோர் கூறுவர் என்பது இதன் பொருள். இது வாயுபுராணத்தில் விரித்துக் கூறப்பட்டது. அறுக்கும்-வரையறுக்கும். முன்னோன்-முதலிற் றோன்றினோன். இறப்புறா-கெடுதலில்லாத.

சகூ. ஒருசாரார்-ஒரு பகுதியினர். அதிகன்-மேம்பட்டவன். இவர்-பிரம விஷ்ணுக்கள். அவன்-உருத்திரன். அவன் கூறு என்றது பரமசிவனாகிய மகாருத்திரன் கூறாகிய சங்கார ருத்திரனை.

ஞச் சங்காரருத்திரன் பெயர் உருவம் செய்கை வேடம் என்பன சிவபிரானேடொப்பவுடையனுதலின் எனையிருவரினும் மேலோன் என்பதாம். மூவரில் சங்கார உருத்திரன் மேம்பட்டவனென்பது சூதசீதை முதலியவற்றிற் கூறப்பட்டது. பிரம விஷ்ணுக்கள் பாற் றேன்றின உருத்திரன் நீலலோஹித ருத்திரனென்பது வாயு சங்கிதை சூதசங்கிதை முதலியவற்றிற் கூறப்பட்டது. சங்கார ருத்திரன் பரமசிவனேடொப்பப் பெயர் முதலியனவுடைய னென் பது சிவபுராணம் சூதசங்கிதை முதலியவற்றிற் கூறப்பட்டது.

ஞ௰. இதுமுதற் சிவபெருமானது விசுவசேவியத்தன்மை கூறப்படுகின்றது.

ஞக. தலைமை யொருவன் - தலைமையினையுடைய ஒருவன். கலதிகள் - மூதேவிகள்: இரக்கம்பற்றிவந்த இகழ்ச்சியைப் புலப் படுத்துஞ்சொல். வறிதே-பயனின்றி. சுலவுதல்-சுழலுதல். மக்கள் எவ்வாறு தேவர்வழிப் பாதந்திரராய் நிற்பரோ அவ்வாறு தேவர் அசுரர் மக்கள் முதலாகிய அனைத்துயிர்களும் சிவபிரான் வழிப்பா தந்திரமாய் நிற்பன. பணி-ஆணை.

ஞஉ. மானிடர் தருமம் - மனிதர் கடமை. மாதவர் - இருடி கள். மானுட தர்மங்களுள் சிவபக்தி சிறந்ததென்று இருடிகள் கூறியதனு லென்க. வாமன புராணத்து 'ஜிதேந்திரியத்வம் சௌசம்ச மாங்கல்யம் பக்திரேவச சங்கரே பாஸ்கரே தேவ்யாம் தர்மோஅயம் மானவஸ் ஸ்மிருத:' எனக் கூறப்பட்டது கொண்டு அஃதறியப்படும்.

ஞ௩. இருபிறப்பாளர்-பிராமணுதிமூவர். காயத்திரி மந்தி ரத்தாற் பிரதிபாதிக்கப்படும் பொருள் சிவபெருமானே யென்பது ஸ்ரீ அரதத்தாச்சாரியரால் சதுர்வேத தாற்பரிய சங்கிரகத்தில் வச் சிர லேபனஞ் செய்யப்பட்டிருக்கிறது. 'ஓம் தத்ஸவிதுர்வரேண் யம் பர்க்கோ தேவஸ்ய தீமஹி த்யோயோ ந: ப்ரசோதயாத்' என் பது காயத்திரி. துசு-ஆடை.

ஞச. விப்பிரர் - மறையோர். மறையோர்க்கு அக்கினியே தெய்வமென்றும் அக்கினிக்கு அந்தர்யாமி சிவபெருமானேயென்

றும் சுருதிஸ்மிருதிகள் கூறுவதால் மறையோர்க்குக் குலதெய்வஞ் சிவபெருமானே யென்பது விளங்கும். யஜுஸ்ஸம்ஹிதை 'ஆக்ந யோ வை ப்ராஹ்மணோ தேவதயா' என்று கூறுகின்றது. சந்தோ கோபநிஷதம் 'த்வம் தேவேஷு ப்ராஹ்மணோ அஸ்யஹம் மநுஷ் யேஷு ப்ராஹ்ம்ணோவை ப்ராஹ்மண முபதாவத்யுப த்வாதாவாமி' என்னும் மந்திரத்தால் சிவபெருமான் தேவருட் பிராமணராதலின் பிராமணன் சிவபெருமானை வழிபடல் வேண்டுமென்று கூறுகின் றது. 'தஸ்மாதக்நி முகே யத்து தத்தம் ஸ்யாத்யேந கேநசித் தத்ஸர் வம் ருத்ரமுத்திஸ்ய தத்தம் ஸ்யாந்நாத்ர ஸம்சய :'' என்பது மிருதி வசனம்.

ருரு. வேத - விளி. பண்ணவர் - தேவர். பரதெய்வம் - அவர் வழிபடும் மற்றைத் தெய்வங்கள். கூர்மபுராணத்தில் 'விப்ராணு மக்நிராதித்யோ ப்ரஹ்மா சைவ பிநாகத்ருக்' என்று கூறிப் பின் யுகதர்மப் பிரகரணத்தில் 'கலௌ தேவோ மஹேச்வர :' என்று விளக்கித் 'தஸ்மாத் ஸர்வ ப்ரயத்நேந ப்ராப்ய மாஹேச்வரம் யுகம் விசேஷாத் ப்ராஹ்மணோ ருத்ரமீசாநம் சரணம் வ்ரஜேத்' என்று கூறுவதால் மறையோர்க்குக் கலியுகத்தில் விசேடதெய்வம் சிவ பெருமானே யென்பது விளங்கும். சிவபெருமானை வழிபடாது ஏனைத் தேவர்களை வழிபடுவோர்க்கு அவர் வணங்கும் ஏனைத் தேவகளும் பயன்றாரா ரென்பதற்கு 'நார்சயந்திஹ யே ருத்ரம் சிவம் த்ரிதசவந்திதம் தேஷாம் தாநம் தபோ யஜ்ஞோ வ்ருதா ஜீவிதமேவச இத:பூர்வம் க்ருதம் கர்ம பவாத்பிரகிலம் வ்ருதா கார்சநம்விநதேந மோஹிதா தேவமாயயா' என்னும் பிரம வசனமே சான்று.

"பிராமணனியே கடவுளர் தம்முட்
பிஞ்ஞகா வேனையோர் தம்முட்
பிராமணன்யானே பிராமணன் றனக்குப்
பிராமணன் கதியுனே யிகழ்வோன்

பிராமணனல்லன்றன் குலதெய்வம்
விண்டு பின்னுளன் றனைத் தொழுமப்
பிராமணற் கிரண்டும் பயப்படாகிரயம்
புகுவனென் றுயர்மறை பேசும்"—என்பது,

காஞ்சிப்புராணம்-காயாரோகணப்படலம். க.

ருசு. பயனை விரும்பினேரும் சிவபெருமானையே வழிபடல் தக்கதென இச் செய்யுள் கூறுகின்றது. சிவபெருமான் பொறுமை யுடையவனென்பது 'நமஸ்ஸஹமாநாய' என்பதாதி மந்திரங்களா லும், கருத்துக்கு எளியவனென்பது 'பாவக்ராஹ்ய மநீடாக்யம் பாவாபாவகரம் சிவம்' என்னும் மந்திரத்தாலும் விளங்கும். சிவ னடியார்க்கு அருள் விரைவிற் கிடைத்தல் சிவபுராணங்களில் வெளிப்படை. அவர் தாம் விரும்பியதினும் மேற்பட்ட பயன் பெறுவரென்பது திருமால் குபேரன் முதலியோர்க்குச் சிவபெரு மான் அருள் புரிந்தமையின் வைத்தறியப்படும்.

ருஎ. உயிர்களுக்குச் சிவபெருமான் அநுக்கிரகிக்கும் போகங் கள் பிராகிருதம் அப்பிராகிருதமென் றிருவகைப்படும். அவற் றுட் பிராகிருதம் இம்மை மறுமையென் றிருவகைப்படும். இச் செய்யுளாற் சிவபெருமானை வழிபடுவார் அவ்விருவகைப் பிரா கிருத போகங்களையு மடைவரென்பது கூறப்படுகின்றது. சிவ பெருமானை வழிபடுவோர் இம்மையில் வேண்டிய வேண்டி யாங்கு பெறுதல் பிரசித்தம். மறுமையில் அவர் அடையும் ஸ்தானம் பிரம விஷ்ணு பதங்களுக்கு மேலான சிவ பதமாம். இது சிவ தரு மோத்திரத்திற் கூறப்பட்டது கொண்டு தெளியப்படும். அம்மை- மறுமை. அநுசரர்-அடியார்.

ருஅ. இச் செய்யுளாற் சிவனடியார் பெறும் அப்பிராகிருத போகங் கூறப்படுகின்றது. அது நிரதிசயானந்தமென்று சொல் லப்படும். அதற்கு வாயில் மெய்ஞ்ஞானமாகும். இவையிரண்டும் சிவபெருமான் றிருவருளாலன்றிக் கிடையா. நிரதிசயானந்தம்- அளவிலின்பம். புகல்-வினைத்தொகை. கர்ப்போபநிடதம் சுவே

தார்சுவதாம், நாராயனேபநிடதம், ஜாபாலோபநிடதம் முதலி யன இதற்குச் சான்று.

௰௯. வேட்டது-விரும்பியது. வற்று - வன்மையுடையது. நீத்து-விலக்கி. ஸ்ரீ அரதத்தாச்சாரியர் சிவ வழிபாடு மனுநித் திரயத்தாலும் செய்யத்தக்க தென்பதைப் பிரமாணவாயிலாய்ச் சதுர்வேத தாற்பரிய சங்கிரகத்தில் நிறுத்தியருளினர்.

௨௰. மருள்-மயக்கம். அவிச்சை-அறியாமை. அவா-ஆசை. ஒருவுக-கழிக்க.

'பநியுமோ கத்தான் மானத்தான் மருளாற்
பற்றிய சார்பினு லுன்னைத்
துதிசெயா திகழ்வோ ரிகழுக கலைசைச்
சுந்தரா சிதம்பரே சுரனே
மதிபொதி சடையா யாங்களெல்லேமும்
வழிவழி யுன்னடித் தொழும்பே
நிதியென வுடையே மென்றுமிக் கருத்தே
நிலைபெறச் செய்துகாத் தருளே'.

எனச் சிவஞான சுவாமிகள் அருளிச் செய்ததுங் காண்க.

பயன் முதலியன

௧. முப்பானிரட்டி - அறுபது. வான்-பெருமை. வாய்மை யின்-வாய்மையால். உய்வான்-எதிர்கால வினையெச்சம். உம்பரான்-தேவன்.

௨. தெரிவு-தெரிதல்.

௩. யானே - ஏகாரம் பிரிநிலை. ஆனு-அமையாத. அரி-விஷ்ணுமூர்த்தி. அந்தஙன்சீர்-அத்தகைய உனது மகிமை.

திருச்சிற்றம்பலம்

முற்றிற்று

உ

செய்யுள் முதற் குறிப்பகராதி

பதிப்புரை

வடநூற் கடலுந் தென்றமிழ்க்கடலும் முழுதுணர்ந் தருளிய மாதவச் சிவஞான முனிவரர், தமது நல்லிசைப் புலமை மலியப் பலதுறைகளினும் இயற்றிவைத்த அரிய தமிழ்நூல்கள் பல. அவைதாம்,இலக்கண விலக்கியத் தனிப் பெரும் புலமை நிரம்புதற்கும் மெய்ப்பொருள் தெளிந்து ஆண்டவன் றிருவரு ளுணர்தற்குமெனக் கருவியும் பயனு மாகப் பிறவியின் கடமையைத் தெளிய உணர்த்தித், தமிழ் மக்கட்குப் பெரிதும் பயன்படுவனவாம். இவர்தம் நூல் கள், ஏனைச் செந்தமிழ்த்தெய்வ முதலாசிரியன்மார் இயற் றிய அரும்பெரும் நூற் கருவூலங்களைத் திறந்துணர்தற்கு, ஒவ்வொன்றும் ஒவ்வொரு திறவுகோல்களாகும்.

ஆகவே, இவ்வரிய பெரிய சைவச் செந்தமிழ் நூல் களைத் தொகுத்தும் வகுத்தும் வெளியிட்டுத் தமிழ்மக்கள் பாற் பரப்பிப் பெரிதும் பயன்படச்செய்ய வெண்ணி, முதலில் ஆசிரியர் முனிவரர் இயற்றிய உரைநடை நூல் களையெல்லாந் தொகுத்து 'உரைச்செய்யு' ளென்னும் பெயரால் உ-ம் பாகமாக வெளியிட்டனம். பின்னர் அவரி யற்றிய செய்யுணடை நூல்களையெல்லாம் ஒரு சேரத் திரட்டி இம் முதற் பாகமாக இப்போது வெளியிட் டிருக்கின்றேம். இதன்கண், சிலவற்றிற்கு அரும்பொருள் விளக்கங்களுய், அருஞ்சொற்பொரு ளகரவரிசைகளும், பாட்டுமுதற்குறிப் பகரவரிசைகளும் இணைக்கப்பெற் றிருப்பது கற்பார்க்குப் பேருதவியாகும்.

இனி, இவ்வாசிரியர் இலக்கணச் சார்பாக நுட்பம் விளக்கி எழுதியிருக்கும் நூல்களையும் பிறவற்றையுஞ் சேர்த்து, மூன்றும் பாகமாக வெளிப்படுத்தக் கருதியிருக் கின்றேம். தண்டமிழ் மக்கள் இவற்றினருமையைப் போற் றித் திருவருளாற் பயன்பெறுவார்களாக!

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார்.

பொருளடக்கம்

ஆசிரியர் வரலாறு

அவதாரம்

ஈண்டிய வளனுடைப் பாண்டி நன்னாட்டில், கதிதரு தமிழ்வரு *பொதியிலின் சாரலில், தேவநேசர்கள் வாழ் பாவநாசத்தைச் சார்ந்த விக்கிரம சிங்கபுரத்தில் ஏழு கால்வழிவரை ஆழிபோற் பரந்த புலமை நிரம்புமாறு அகத்தியனார்பால் வரம் பெற்ற பரம்பரைச் சைவ வேளாளர் குலத்தில், கல்வியுஞ் செல்வமும் ஒருங்கமையைப் பெற்றுச் சிவபத்தி அடியார் பத்திகளிற் சிறந்து விளங்கிய ஆனந்தக் கூத்தர் என்பார்க்கு

,, நிலத்துமா னிடர்க்கே
யுரிய தாகி யுறுதமுன் பெரிது
முற்றுழி நீங்குவ தொன்றுமாம் வேட்கை
யென்னு மதனுக் கென்றும்வே றாகி
மனத்தொடு மனத்தினை மன்றப் பிணிக்குங்
கட்புல னாகாக் கனிவெனுங் கயிறு
வெண்டா தின்றொடர் மேதகு பட்டு
முடிச்சென வொருகவி முன்பணி பெறவே
கழறிய கழிபெருங் காதன்மிக் கொத்த
கற்பினும் பொற்பினுங் கன்மகள் பொன்மக
ளென்ன லாகு மில்லக் கிழத்தி,' யாகிய

---

* பொதியமலை என்பது பாண்டி நாட்டில் திருநெல்வேலி ஜில்லாவைச் சேர்ந்த அம்பாசமுத்திரத்திற்கு ஏழுமைலில் உள்ளது.

மயிலம்மையார் மணி வயிற்றிருந்து ஏழாவது கால்வழியாக நற்றமிழ் நாடு முற்றிய தவத்தால் ஆசிரியர் திருவவதாரஞ் செய்து முக்களாலிங்கரென்னும் பிள்ளைத் திருநாமம் பெற்று, 'விளையும் பயிர் முளையில் தெரியும்,' என்பதற்கொப்ப அன்பும் அருளும் வாய்மையுந் தூய்மையும் பருவத்திற் பன்மடங்கு கொண்ட மதிநுட்பமும் உடையராய்ப் பெற்றூர்க்கும் உற்றூர்க்கும் அடங்கா மகிழ்ச்சி தந்து ஐந்தாவது ஆண்டடைந்தனர். அவ்வாண்டில் வித்தியாரம்பஞ் செய்யப் பெற்றுப் பாடசாலை சென்று வருவாராயினர்.

வித்தியாரம்பம்

அவ்வாறு சென்று வருங்கால் ஒருநாள் திருவாவடுதுறையினின்றும் போந்து பரமன் எழுந்தருள்கின்ற பதி பல புக்கு வணங்கி விக்கிரமசிங்கபுரத்து வீதிவழி வந்த சில முனிவர்களைக் கண்டு வீழ்ந்திறைஞ்சி முகமன் வழங்கித் தமது இல்லம் அழைத்துச் சென்று அருந்ததி யொத்த தமது அன்னையாரை அவர்கட்குத் திருவமுது அருத்துமாறு இரந்து கூற, அவ் வம்மையார் அதற்கு ஒருப்பட்டு அவர்களை இனிது அருத்த அதைக் கண்டு ஞானவிருத்தராகிய ஆசிரியர்,

திருவாவடுதுறையினின்றும் போந்த முனிவர்களையுபசரித்தல்

'அருந்ததியென் னம்மை யடியவர்கட் கென்றுந்
திருந்த வமுதளிக்குஞ் செல்வி—பொருந்தவே
யானந்தக் கூத்த ரகமகிழத் தொண்டுசெயு
மானந்த வாத மயில்'

என்னுஞ் செய்யுளை ஆண்டுக் கூறினர். அதன்பின் வீடு

புக்க ஆனந்தக் கூத்தர் இவ் வருஞ்செயல் கேட்டுப் பேரின்பப் பரவையுட் படிந்து அரும்பெறற் புதல்வனை மார்புறத் தழீஇ, 'கருவினிற் றிருவுடைக் காதல்! திருவமுது செய்து சென்ற முனிவர்களை எனக்குக் காட்டுக. யானும் அவர்கள் அடிகளிற் றாழ்தல் வேண்டும்' என, ஆசிரியர் தமது தந்தையாரை அவர்கள் இருந்துழி அழைத்துச் செல்ல, அவரும் எட்டுறுப்பும் ஐந்துறுப்பும் நிலந் தோய வீழ்ந்து வணங்கி நின்றுழி அதி தீவிர பக்குவமுடைய

தீக்ஷையும் சந்நியாசமும் பெறுதல்

ராகிய ஆசிரியர் தந்தை தாயாரை நீத்து அறவாழி யந்தணன் றாள் சேர்ந்து பிற வாழி நீந்தப் பரிந்து அம் முனிவர்களோடு தாஞ் செல்ல மனங் கொண்ட குறிப்பினை யுணர்த்தச் சற்புத்திரரைப் பிரியச் சற்றும் மனமின்றியும் அதற்கு ஒருப்பட்டு அவரை அங்கு விட்டுத் தமியராய்த் திரும்பி வீடு புக்கார். ஆசிரியர் அம் முனிவர்களோடு வழிக்கொண்டு இடைப்பட்ட பல சிவதலங்களைத் தரிசித்துத் திருவாவடுதுறை யடைந்து மடாலயத்தினுட் புகுந்து ஆதீன பரமாசாரியராகிய நமச்சிவாய மூர்த்திகளை இறைஞ்சி அன்னார் அருளுக்குற்று, ஒடுக்கத்தின்கணெழுந்தருளியிருந்த ஞானசாரியராகிய பின் **வேலப்ப தேசிகரைக்** கண்கள் களிகூரக் கண்டு வணங்கிச் சின்னாளில் அந்த ஞான தேசிகர்பாற் சிவதீக்ஷையும் சைவசந்நியாசமும் சிவஞான யோகிக ளென்னும் தீக்ஷாநாமமும் பெற்று மெய்கண்ட சாத்திர பண்டார சாத்திரங்களைக் கற்று வடநூற் கடலுந் தென்னூற் கடலும் எல்லைகண் டுணர்ந்தனர்.

ஆசிரியருக்கு உபதேசகுரு வேலப்பதேசிகரேன்பது.

'எவ்வெவகோட் படுபொருளு மஞ்செழுத்தி
னடக்கியவற் றியல்பு காட்டி
மெய்வகையஞ் சவத்தையினு நிற்குமுறை
யோதுமுறை விளங்கத் தோற்றி
யவ்வெழுத்தி னுள்ளீடு மறிவித்துச்
சிவபோகத் தழுத்தி நாயேன்
செய்வினையுங் கைக்கொண்ட வேலப்ப
தேசிகன்றாள் சென்னி சேர்ப்பாம்'

என்னுங் காஞ்சிப் புராணச் செய்யுளா னறிதற்பாற்று.

ஆசிரியர் காலம் — காலம் இற்றைக்கு ஏறக்குறைய நூற்றைம்பது ஆண்டுக ளென்பதற்குப் பல சான்றுக ளுண்டு. அவற்றுட் சில கூறுதும் :—

(1) ஈண்டுப் பட்டத்தெழுந் தருளியிராநிற்கும் மகா சந்நிதானத்திற்கு அறுவர்க்கு முன் ஆண்டு எழுந்தருளி யிருந்த பின் வேலப்ப தேசிக ஞானசாரியர் மாணவர் என்பது.

(2) சற்றேறக் குறைய முப்ப தாண்டுகட்கு முன் னர்ச் சென்னைக்கட் டமிழிலக்கணத்தைப் பன்னிலங் களின் விதைத்துப் பயிர் செய்த இராமாநுஜ கவிராய ரென்பார் ஆசிரியர் மாணாக்கர் பன்னிருவருள் இராமநாத புரம் சோமசுந்தரம் பிள்ளையவர்கள்பாற் கல்வி பயின்றன ரென்பது.

(3) விசுவாவசு ஆண்டு எங்கு நிறை நிலை யடைந்தன ரென்பது. இது சென்ற விசுவாவசுவிற்கு மூன்றும்

விசுவாவசுவாதல் வேண்டுமாகலின், கி. பி. 1785 ஆண்டென்க.

பாவன்மையும் பிரதிபையும்

திருநாவுக்கரசு நாயனார் கல்லைத் தெப்பமாகக்கொண்டு கடலினின்றுங் கரையேறிய திருப்பாதிரிப்புலியூர்ச் சிவாலயத்தின்கட் புலவர் சிலவரும் செல்வர் பலவருங் கூடிய அவையில் நூறு பொன்கொண்ட கிழியொன்று தூக்கி, 'கரையேற விட்ட முதல் வா வுன்னை யன்றியுமோர் கதியுண்டாமோ' என்னும் ஈற்றடி தந்து 'பாட்டினை நிரப்புநர் இக் கிழி பெறுக' என்றனர். ஆண்டு அங்கண் யாத்திரை வந்து எழுந்தருளிய **ஆசிரியர்** அச்செய்தி யறிந்து ஒ ரந்தணனை அக் கிழி கெள்ளுமாறு ஏவி,

'வரையேற விட்டமுதஞ் சேர்தனிட வருந்தினைவல் வின [மென்றூவு
முரையேற விட்டமுத லாகுமோ வெனச்சித்தென் றுரைக்கி [லென்னு
நரையேற விட்டமுத னளவனுக் கொண்டேறும் புலிசை [மேவுங்
கரையேற விட்டமுதல் வாவுன்னை யன்றியுமோர் கதியுண் [டாமோ.'

என்றொரு நொடிப் போதிற் பாட்டினை நிறைத்தன ரென்ப.

ஒருநாள் மடத்துச் சுயம்பாகி ஆசிரியரை யணுகி 'இன்று யான் என்ன கறி சமைப்பது?' என்றவுடன் தட்டொன்று மின்றி,

'சற்றே துவையலரை தம்பியொரு பச்சடிவை
வற்றலே தேனும் வறுத்துவை--குற்றமிலே
காயமிட்டுக் கீரைகடை கம்மென வேமிளகுக்
காயரைத்து வைப்பாய் கறி,

என்ற வெண்பாவைக் கூறினரென்ப. ஆசிரியர் நிலைக்குத் தக்க ஊண் கொண்டன ரென்பதும் இன்மொழி வழங்கினரென்பதும் இதனல் விளங்குமாறு காண்க.

ஆசிரியர் காஞ்சிமா நகரத்து வீற்றிருந்துழி வைணவரொருசிலர் கம்பரையும் அவர் கவித் திறத்தையும் பலபடி புகழ்ந்து பேசித் தமிழ் மொழிக்கட் கம்பராமாயணத்தைப் போல்வதொரு காவியம் வேறின்றெனத் தருக்கிக் கூற, ஆசிரியர் அக் கம்பராமாயணத்து மங்கலமாகிய,

'நாடிய பொருள்கை கூடு ஞானமும் புகழு முண்டாம்
வீடியல் வழிய தாக்கும் வேரியங் கமலே நோக்கு
நீடிய வரக்கர் சேனை நீறுபட் டழிய வாகை
சூடிய சிலேயி ராமன் றேள்வலி கூறு வோர்க்கே'

என்னுஞ் செய்யுண் முற்றுங் குற்றமுடைத்தெனத் தடை பல கூற, அவற்றென்றற்கேனும் விடை கூற வியலாது அவ் வைணவர்கள் விழிக்கத் தாமே அவை யாவற்றிற்கும் விடை கூறினரென்ப. அத் தடை விடைக ளடங்கிய நூல் 'கம்பராமாயண முதற்செய்யுட் சங்கோத்தர விருத்தி' என்னும் பெயரோடு உலவுதலறிக.

ஆசிரியர் காஞ்சிமாநகர் வீற்றிருப்புழிச் சில புலவர்கள் ஒருங்குகூடி ஆசிரியரை நோக்கி நீவிர் காஞ்சிப் புராணஞ் செய்யப் புக்கு அதன்கட் கடவுள் வாழ்த்துள்,

'சங்கேந்து மலர்க்குடங்கைப் புத்தேளு
மறைக்கோவுந் தழல்கால் சூல
மங்கேந்து மம்மானுந் தத்தமது
தொழிறலைநின் றுற்றச் செய்தோர்
பங்கேந்தும் பெருமாட்டி விழிகளிப்ப
விருமுனிவர் பணிந்து போற்றக்
கொங்கேந்து மணிமன்றுட் குனித்தருளும்
பெருவாழ்வைக் குறித்து வாழ்வாம்'

என்னுஞ் சபாநாயகர் துதியை முன்னர் அமைத்து,

'தணந்தபெருந் துயர்க்கடன்மீக் கூர்தலினுன்
மலைபயந்த தரள மூரற்
கணங்குழையாள் புரிபூசை முடிவளவுந்
தரியாம லிடையே கம்பை
யணங்கினைத்தூ தெனவிடுத்து வலிந்திறுகத்
தழீஇக்கொள்ள வமையாக் காதன்
மணந்தருளிக் குறிபூண்ட வொருமாவிற்
பெருமானை வணக்கஞ் செய்வாம்'

எனத் தலநாயகராகிய ஏகாம்பரநாதர் துதியைப் பின்னர் வைத்தது தவறென்று சாதிப்ப ஆசிரியர் தமது மாணாக்கனைக்கொண்டு அவர்களைப் பங்கப்படுத்தலே தகுதியெனத் திருவுளத் தமைத்து ஆண்டுச் சென்னைக்கண் வீற்றிருந்த உச்சிமேற் கொளத்தகு கச்சியப்ப முனிவரை ஆங்கு வருவித்து ஏகாம்பரநாத ராலய மண்டபத்திற் பேரவையொன்று கூட்டித் தாம் ஏவியவாறு கச்சியப்ப முனிவர் பிரசங்கஞ் செய்யப் புகுமுன் அத் தலத்து ஓதுவாரைத் தேவாரப் பதிக மொன்றோதுமாறு பணிக்க அவர் 'திருச்சிற்றம்பலம்' என்று தொடங்கினர். அங்கு அவையோரை

"ஓதுவார் 'திருச்சிற்றம்பலம்' என்ற நுமக்கு உடன் பாடோ? இப் பிருதிவித் தலத்தில் தேவாரம் ஓதப்புகுங் கால் என் 'பிருதிவியம்பலம்' எனத் தொடங்குமாறு செய்வித்த லாகாது"? என வினவுவித்துப் புலவர்களைத் தலை வணக்கினர் என்ப.

ஆசிரியர் அருளிச்செய்த நூல்களாவன :—

இலக்கணம்.

(1) தொல்காப்பியச் சூத்திர விருத்தி. (2) இலக்கண விளக்கச் சூறாவளி. (3) சங்கர நமச்சிவாயப் புலவர் நன்னூல் விருத்தி யுரைத்திருத்தம்.

இலக்கியம்.

(1) காஞ்சிப்புராணம் (முதற் காண்டம்). (2) சோமேசர் முதுமொழி வெண்பா. (3) திருவேகம்பரந்தாதி. (4) திருமுல்லைவாயிலந்தாதி. (5) கலைசைப் பதிற்றுப்பத் தந்தாதி. (6) இளசைப் பதிற்றுப்பத்தந்தாதி. (7) கச்சி யானந்தருத்ரேசர் பதிகம். (8) திருவேகம்பர் ஆனந்தக் களிப்பு. (9) செங்கழுநீர் விநாயகர் பிள்ளைத்தமிழ். (10) அமுதாம்பிகை பிள்ளைத்தமிழ். (11) செப்பறைப்பதி அகிலாண்டேசுவரி பதிகம். (12) திருத்தொண்டர் திருநாமக்கோவை. (13) நமச்சிவாய மூர்த்திகண்மாலை முதலியன.

தருக்கம்.

இயற்றிய நூல்கள் (4) தருக்க சங்கிரகமும் அன்னம் பட்டீயம் என்னுந் தருக்க சங்கிரக தீபிகையும்.

தத்துவம்.

(1) சிவஞானபோத மகா பாடியம். (2) சிவஞான போதச் சிற்றுரை. (3) சிவஞான சித்தியார் (சுபக்கம்) உரை. (4) சித்தாந்தப் பிரகாசிகை. (5) 'எடுத்து' என்னுஞ் சொல்லுக் கிட்ட வயிரக் குப்பாயம். (6) சிவசமவாத வுரை மறுப்பு.

சமயம்.

(1) சுலோக பஞ்சக மொழிபெயர்ப்பு. (2) சிவ தத்துவ விவேகம்.

சம்பிரதாயம்.

1. திருவாவடுதுறை மரபட்டவணை மறுப்பின் மறுப்பு.

இவ்வாறு பல நூல்களையும் பலவுரைகளையும் பல கண்டனங்களையுஞ் செய்து தமிழ் இலக்கண இலக்கிய நூல்களுந் தருக்கநூல் தத்துவநூல் சமயநூல் முதலியனவும் நன்மாணுக்கர்க்குப் போதித்து 'வான் செய்த வுதவிக்கு வையக மென் செய்யும்' என்றவாறு மாறில்லாத பேருதவியை இவ் வையகத்திற்குச் செய்த 'ஆதீன குலதெய்வ' மென ஆன்றோர் போற்றுந் திராவிட மகாபாடியங் கண்ட ஆசிரியர் சித்திரைமதி ஆயிலிய நக்ஷத்திரத்திற் சிவபரிபூரண தசை யடைந்தனர்.

நிறைநிலை

யடைதல்

இதனை,

மன்னும் விசுவா வசுவருட மேடமதி
யுன்னிரவி நாட்பகலோ தாயிலியம்—பன்னுந்
திருவாள னெங்கோன் சிவஞான தேவன்
திருமேனி நீங்கு தினம்.

என்னும் வெண்பாவா னறிக.

சிவஞான சுவாமிகள் சேவடி. வாழ்க.

முற்றிற்று

சிவஞானசுவாமிகள்
அருளியன

உ
திருச்சிற்றம்பலம்

அரதத்தசிவாசாரியர் சுலோகபஞ்சக

மொழிபெயர்ப்பு

உபர்கா யத்திரிக் குறிப்பொரு ளாகலிற்
றசரதன் மதலை தாபித் தேத்தலிற்
கண்ணன் கயிலையி னண்ணினின் றிரப்பப்
புகழ்ச்சியி னமைந்த மகப்பே றுதவலிற்
றனுது விழியுட னொராயிரங் கமலப்
புதுமலர் கொண்டரி பூசனை யாற்றலின்
ஆங்கவற் கிரங்கி யாழியீந் தருடலின்
ஐங்கணைக் கிழவனை யழல்விருந் தாக்கலின்
அமைப்பருங் கடுவிட மமுதுசெய் திடுதலிற்
றென்றிசைத் தலைவனைச் செகுத்துயிர் பருகலின்
அவுணர் முப்புர மழியவில் வாங்கலிற்
றக்கன் வேள்வி தகர்த்தருள் செய்தலிற்
றனஞ்சயன் றனக்குத் தன்படை வழங்கலின்
மாறுட மடங்கலை வலிதபக் கோறலின்
மாயோன் மகடூஉ வாகிய காலைத்
தடமுலை திளைத்துச் சாத்தனைத் தருதலின்
ஆழ்கடல் வரைப்பி னுன்றோ ரநேகர்
அன்புமீ தூர வருச்சனை யாற்றலின்

நான்கிரு செல்வமு மாங்கவர்க் கருடலின்
ஐயிரு பிறப்பினு மரியருச் சித்தலின்
இருவரு மன்னமு மேனமு மாகி
அடிமுடி தேட வழற்பிழம் பாகலிற்
பிறப்பிறப் பாதி யுயிர்க்குண மின்மையிற்
கங்கைசூழ் கிடந்த காசிமால் வரைப்பிற்
பொய்புகல் வியாதன் கைதம் பித்தலின்
முப்புர மிறப்புழி முகுந்தப் புத்தேள்
மால்விடை யாகி ஞாலமொடு தாங்கலின்
அயன்சிர மாலை யளவில வணிதலின்
ஞானமும் வீடும் பேணினர்க் குதவலிற்
பசுபதிப் பெயரிய தனிமுதற் கடவுள்
உம்பர்க ளெவர்க்கு முயர்ந்தோன்
என்பது தெளிக வியல்புணர்ந் தோரே.

சுலோக பஞ்சக மொழிபெயர்ப்பு
முற்றிற்று.

உ

திருச்சிற்றம்பலம

கச்சி ஆனந்தருத்திரேசர் பதிகம்

ஐந்தையா றினைய டக்கி யருந்தவம் புரியா ரேனும்
வந்தையா வெனவெல் லோரும் வணங்கிட வாழ லாமால்
முந்தையா றிரண்டு தன்ம முதல்விசெய் மூதூர் வாழும்
எந்தையா னந்த ருத்தி ரேசனை யிறைஞ்சி னோர்க்கே. ௧

குடங்களிற் பணைத்த ணந்த கொங்கைமால் களிறு மல்குற்
படங்களுங் கொடுமின் னார்செய் பருவரல் பாற்ற லாமால்
மடங்களைந் தறிவான் மிக்க மாதவர் மனம்போற் காஞ்சி
இடங்கொளா னந்த ருத்தி ரேசனை யிறைஞ்சி னோர்க்கே. ௨

வருந்தலா தெண்ணெண் கல்வி வாய்க்குமெண் செல்வப் பேறு
பொருந்தவா யுகங்க ளூறும் புகழுடன் பொலிய லாமால்
திருந்தவால் வளையு முத்துஞ் செய்தொறுஞ் செறிதென் காஞ்சி
இருந்தவா னந்த ருத்தி ரேசனை யிறைஞ்சி னோர்க்கே.

பொறைதவ மறிவொ ழுக்கம் புத்திர மித்தி ராதி
குறைவறு செல்வம் யாவுங் குலவவீற் றிருக்க லாமால்
மறையொலி முரசந் துஞ்சா வளநகர்க் காஞ்சி வாழும்
இறைவனா னந்த ருத்தி ரேசனை யிறைஞ்சி னோர்க்கே. ௪

ஆசைவே ரகழ்ந்து வெண்ணீ றஞ்செழுத் தக்க மாலை
பூசியுச் சரித்துப் பூண்ட புனிதரோ டிணங்க லாமால்
யோசனை கமழுப் பான முடுத்திடுங் காஞ்சி யூர்வாழ்
ஈசனா னந்த ருத்தி ரேசனை யிறைஞ்சி னோர்க்கே. ௫

பானந்தங் கையி லேந்தும் பைந்துழாய் மார்பன் முன்னும்
வானந்தங் கமரர் யாரும் வணங்கவாழ்ந் திருக்க லாமால்
கானந்தன் பொழிலி லாறு கால்செயுங் கச்சி மூதூர்
ஆனந்த ருத்தி ரேச னடித்துணை யிறைஞ்சி னோர்க்கே. ௬

கங்கணான் குள்ளான் முன்னுங் கருமமுங் காரா னூர்தி
செங்கையார் பாசந் தன்னாற் சிமிழ்த்தலுந் தீர லாமால்
அங்களா லுயர்ந்த காஞ்சி யகநக ரமர்ந்து வாழும்
எங்களா னந்த ருத்தி ரேசனை யிறைஞ்சி னோர்க்கே. ௭

விழிகளான் மாதர் நாளும் விளைத்திடும் வேட்கை யாய
குழிகளா டுற்று வீழுங் கொடுந்துயர் ருமைக்க லாமால்
வழிகளார் சோலை சூழ்ந்த மாமதிற் கச்சி வாழும்
எழில்கொளா னந்த ருத்தி ரேசனை யிறைஞ்சி னோர்க்கே. ௮

இருக்கெலா மளவிட் டின்னு மினைத்தென வறிய வெட்டாத்
திருக்குலா வியபே ரின்பச் செழுங்கட றிளைக்க லாமால்
மருக்கலா ரங்கள் மொய்த்த வாவிசூழ் காஞ்சி வாழ்வுற்
றிருக்குமா னந்த ருத்தி ரேசனை யிறைஞ்சி னோர்க்கே. ௯

மாந்தளி ரியலார் செம்பொன் மண்ணெனு மார்வ வாரி
நீந்திமே லான முத்தி நீள்கரை யேற லாமால்
காந்துபொன் மாடஞ் சூழ்ந்த கச்சியம் பதிவாழ் கங்கை
ஏந்துமா னந்த ருத்தி ரேசனை யிறைஞ்சி னோர்க்கே. ௰

ஆனந்த மலைபோ லோங்கு மம்பலத் துமையா ளங்கை
ஆனந்த மகிழ்ச்சி பூப்ப வானந்த வமிழ்த மூறி
ஆனந்த நிருத்தஞ் செய்யு மங்கனைன் கச்சி மூதூர்
ஆனந்த ருத்தி ரேச னடியிணைக் கன்பு செய்வாம். கக

கச்சி ஆனந்தருத்திரேசர் பதிகம்
முற்றிற்று.

உ

திருச்சிற்றம்பலம்

செப்பறைப்பதி

அகிலாண்டேசுவரி பதிகம்

பண்டைவினை யாலும்வரு பழவினையி னாலும்
பார்த்தகன் மத்தி னாலும்
பாழான மாயைப் புணர்ச்சியா லுந்தொலைவில்
பலபல தநுக்க டுக்கிக்
கொண்டுசுழல் பாவியேன் செய்கின்ற பிழையெலாங்
குணமெனக் கருதி யெளிதாக்
கோலங்கள் காட்டியெனை யிவ்வள வெடுத்தாண்ட
குணமேரு வேயி றைந்து
மண்டுமா னந்தவெள் ளத்தையுண் டின்புறவும்
வைப்பதென் றோவ திகிலேன்
வானாகி மண்ணாகி மற்றுளவெ லாமாகி
மறைநான்கு மறியா மலே
அண்டபகி ரண்டப் பரப்புமா யப்புறமு
மளவற்று நின்று லாவும்
அருண்ஞான வாரியே ராசை*மே வியசெல்வ
வகிலாண்ட மென்னு மரசே. க

* ராசை - ராசவல்லிபுரம்.

கல்லொத்த நெஞ்சராய் வாழ்வர்சிலர் புவியிற்
கறங்குசக டென்ன வோடிக்
காலோய்வர் சிலர்மரப் பேய்போல நாடொறுங்
கதறுவார் சிலர்கு விந்த
வில்லொத்த நுதலினர் போகத்தை நாடியே
மெலிவர்சிலர் பசையி லாத
வெற்றென்பி னைக்கடித் தலகுபுண் ணுய்க்குருதி
விழுமதைப் பருகு நாய்போல்
சொல்லற்ற வுலகினுறு துன்பெலாஞ் சுகமாய்த்
துடிப்பர்சில ரவர்க ளோடு
துடியாத வண்ணமெனை யிவ்வள வெடுத்திருட்
டொகையெலா நீக்கி யல்லோ
டல்லொத்த பேரின்ப வெள்ளத் தழுத்தியே
பசைவற் றிருக்க வைத்த
அருண்ஞான வாரியே ராசைமே வியசெல்வ
வகிலாண்ட மென்னு மரசே. உ

தூலவுட லரவினது தோலென்ன நீங்கவே
குக்குமத் தோடு யிரினைத்
துன்பமுறு யாதனு வுடலத் திருத்தியே
சுடருமெரி வாயி லிடுவார்
மேலதிற் கனலெனச் செம்பினை யுருக்கியே
விடுவர்விழி தன்னி னூசி
விம்முற விறக்குவார் நரகுதொறும் வெவ்வேறு
விதமாக வூழி யூழி
காலம தழுத்துவார் தலைபெழும் பிடினுச்சி
கவிழுற வடிப்ப ரந்தக்

கனலொத்த யமதூதர் கையிலடி யேன்றனைக்
காட்டிக் கொடுத்தி டாதே
ஆலமமு துண்டமரர் தமையாண்ட நீர்கருணை
யன்னமே யுனை நம் பினேன்
அருண்ஞான வாரியே ராசைமே வியசெல்வ
வகிலாண்ட மென்னு மரசே. ௩

செப்புறு களிம்பென வநாதிமல மூழ்கியிருள்
சேருமலர் விழியென் னவே
தெளிவற்ற கேவலத் தசைவற் றிருந்துமல
சேட்டையாற் குழவி குருடர்
தம்பிணியி னுஹற்ற பால்கோலை நோக்கவவை
தமைபளிப் பாரென் னநான்
சார்கன்ம மாயையை விரும்பநீ தந்திடச்
சகலனைச் சுழல்க றங்கு
பம்பரம தென்னநீள் பிறவிச் சுழிக்குளே
பட்டுழல் பெரும்பா வியேன்
பாழான மலமற்று வினைபற்று மாயையின்
பற்றுவிட் டெனைய றிந்துன்
அம்பொனடி நீழல்சேர்ந் தானந்த முண்டுநா
னதுவா யிருப்ப தென்றோ
அருண்ஞான வாரியே ராசைமே வியசெல்வ
வகிலாண்ட மென்னு மரசே. ௪

முன்னைமல மென்னுமொரு பேய்பிடித் திருவினை
முதிர்ந்தவெறி யரவு சுற்றி
முடியாத பிறவிக் கடற்குள்வீழ்ந் தாசைபென
மூண்டசுழி வந்த மிழ்த்த

மின்னனைய மாதரெனு மகரமீ னொருபுறம்
விழுங்கவைம் பொறிக ளான
விறல்சுறு வைந்தும்வந் தெங்கணு மிழுக்கநான்
வீணிலே நைவ தானேன்
பொன்னனைய நின்னடித் தாமரைத் துணையலாற்
புகலிடம் பிறிது காணேன்
பொய்யனே னாகிலுங் கைவிடா தாளுவாய்
புவனங்க ளியாவு மீன்ற
அன்னையே பகிரண்ட முகடெலாங் கரைபுரண்
டப்புறமு மலைத தும்பும்
அருண்ஞான வாரியே ராசைமே வியசெல்வ
வகிலாண்ட மென்னு மரசே. ௫

இசையொத்த பண்களுஞ் சொல்லோடு பொருள்களு
மிருளினொடு வெளியு நீண்ட
இன்பமொடு துன்பமு நரகொடு சுவர்க்கமு
மெண்ணுதற் கரிய வான
வசைபெற்ற யோனிபே தங்களும் மவைதம்மின்
மருவுமுயிர் யாவு மோங்கு
மறைநாலு வர்க்கமு மற்றுமுள கலைகளு
மலைகட லெலாமு மலையும்
திசையெட்டு மிரவியொடு சோமனுஞ் சமபத்
திராட்சிகளு மொருவ ராலும்
தேடரிய புவனகோ டிகளுமதில் வாழ்கின்ற
தெய்வங்கள் பலவும் யாவும்
அசைவற்ற பரவெளிக் குள்ளே யிருக்குமென்
றறிவித் தெனக்க லந்த

அருண்ஞான வாரியே ராசைமே வியசெல்வ
வகிலாண்ட மென்னு மரசே. ௬

நீயுள்ள தென்றன்று நானுமுள னன்றுமுத
னீங்காம லென்னி டத்தின்
நேசம்வைத் தேநீ யிருக்குநான் மலமாகி
நின்றதே துடலெ னக்கங்
கேயுமுறை யெங்ஙனே வினைகடரு மெனில்வைக
ளேறிடா தநுவி லாமல்
எட்டாத கேவல மிருப்பமே லவைகன்ம
மாகாவ வித்தை கண்டு
காயம தளிப்பதெனி லின்புதுன் புறமுன்பு
கன்மமே திதனை யருள்வாய்
சுகனமுக டெங்கடந் தளவில்பு வனங்களுங்
கரைபுரண் டெங்கு மோங்க
ஆயுமறை காணு தகண்டமாய் நின்றதிரு
வக்கினீ சுரர்ம ருவுநீள்
அருண்ஞான வாரியே ராசைமே வியசெல்வ
வகிலாண்ட மென்னு மரசே. ௭

உடலத்தி லின்றெனக் கொழியாத விச்சைதா
னுற்றதே துன்ற னாலே
உற்றதே னீதநு வளித்திடும் போதெலா
முறவேண்டு மென்ற னியல்பேல்
கடலொத்த பிறவிதனி லெந்நாளு மவ்விச்சை
கட்டுற்று நிற்க வேண்டும்

கடியமல சத்திசற் றகலவரு மெனிலவை
கழித்ததார் நீக ழிக்கில்
கெடலுற்ற வெல்லா வுயிர்க்குநீக் குவையாங்
கெடுத்தாலு மம்ம லந்தான்
கெட்டாலு முனைவந்து கிட்டிவழி படுவதென்
கேடிலா விவைய ருளுவாய்
அடலுற்ற திரிபுர மடங்கலு மெரித்ததிரு
வக்கினீ சுரரை மருவும்
அருண்ஞான வாரியே ராசைமே வியசெல்வ
வகிலாண்ட மென்னு மரசே. அ

மங்கையர்க ளின்பமே முத்தியென் றுங்கந்த
மடிவதே முத்தி யென்றும்
வருமுக் குணங்கெடுதன் முத்திவினை மாய்வதே
வளர்முத்தி மூன்று மலமும்
பங்கமுற லேமுத்தி யென்றுநித் தியதேகம்
பற்றுவது முத்தி யென்றும்
பலவும் பகுத்தறிதன் முத்தியுயிர் கெடுவதே
படர்முத்தி சித்தி களெலாம்
தங்குவது முத்திபா டாணமொத் திடுவதே
தகுமுத்தி யென்று முயிர்கள்
தடுமாற மலமறுத் தகலாத திருவடித்
தாமரையென் முடியி லூன்றி
அங்கமுயிர் பொருளெலாங் கைக்கொண்டு நாயினேற்
கானந்த முத்தி தந்த
அருண்ஞான வாரியே ராசைமே வியசெல்வ
வகிலாண்ட மென்னு மரசே. கூ

பூதமே யென்றும்வரு பொறியென்று மனமாதி
பொருளென்று நீள்க லாதி
பொருளொன்று முயர்சுத்த மாயைபொரு ளென்றுமிப்
புவியிற் சிருட்டி செய்யும்
நாதர்பொரு ளென்றுமர வணையிற் றுயின்றவொரு
நாரணன் பொருள தென்றும்
நானுவி தங்குளறி னோர்குருடர் பலர்கூடி
நாடியொளி தேடு மாபோல்
பேதமுறு பிறவியிற் சுழல்வதல் லாலுண்மை
பெற்றிடுவ துண்டோசொ லாய்
பின்னுமுன் னும்பக்க மேல்கீழு மாயண்ட
பித்திக ளுடைத்து மண்டி
ஆதிநடு வந்தமு மிலாமலடி நாயேனை
யகலாம லாண்டு கொண்ட
அருண்ஞான வாரியே ராசைமே வியசெல்வ
வகிலாண்ட மென்னு மரசே. ய

அகிலாண்டேசுவரி பதிகம்
முற்றும்.

உ

திருச்சிற்றம்பலம்

திருவேகம்பர்

ஆனந்தக்களிப்பு

ஆனந்தமானந்தந்தோழி - கம்பர்
ஆடுந்திருவிளையாட்டினைப்பார்க்கில்
ஆனந்தமானந்தந்தோழி.

ஒன்றுவிட்டொன்றுபற்றுமல் - என்றும்
ஒன்றுவிட்டொன்றினைப்பற்றவல்லாருக்
கொன்றுமிரண்டுமல்லாமல் - நின்ற
ஒன்றினைவாசகமொன்றிலளிப்பார், ஆனந்தம்.

இரண்டுவினையால்விளைந்த - வகை
இரண்டையுங்காட்டியென்சென்னியின்மீதே
இரண்டுசரணமுஞ்சூட்டி - அஞ்சில்
இரண்டையிரண்டிலடக்கவல்லாராம், ஆனந்தம்.

மூன்றுலகும்படைப்பாராம் - அந்த
மூன்றுலகும்முடனே துடைப்பாராம்
மூன்றுகடவுளாவாராம் - அந்த
மூன்றுகடவுளர்காணவொண்ணாராம், ஆனந்தம்.

நாலுவருணம்வைப்பாராம் - பின்னும்
நால்வகையாச்சிரமங்கள்வைப்பாராம்
நாலுபாதங்கள்வைப்பாராம் - அந்த
நாலுக்குநாலுபதமும்வைப்பாராம், ஆனந்தம்.

அஞ்சுமலமஞ்சவத்தை - பூதம்
அஞ்சுதன்மாத்திரையஞ்சிந்திரியம்
அஞ்சுதொழிலஞ்சுமாற்றி - எழுத்
தஞ்சுமஞ்சாகவமைக்கவல்லாராம், ஆனந்தம்.

ஆறுறுதத்துவக்கூட்டம் - உடன்
ஆறத்துவாக்களுமாதாரமாறும்
ஆறுகுற்றங்களுநீங்க - இரண்
டாறின்முடிவினடனஞ்செய்வாராம், ஆனந்தம்.

ஏழுபுவனப்பரப்புங் - கடல்
ஏழுஞ்சிகரிகளேழும்பெருந்தீ
வேழும்பிறவிகளேழும் - இசை
ஏழும்படைத்தவிறைவரிவராம், ஆனந்தம்.

எட்டுவடிவுமாவாராம் - அந்த
எட்டுவடிவுக்குமெட்டரியாராம்
எட்டுக்குணமுடையாராம் - பத்தி
எட்டுமுடையோரிதயத்துளாராம், ஆனந்தம்.

ஒன்பதுமொன்பதுமொன்றும் - மற்றை
ஒன்பதுமுப்பதுமொன்பதுமொன்றும்
ஒன்பதுமொன்பதுமொன்றும் - பின்னும்
ஒன்பதுமானவைக்கப்புறத்தாராம், ஆனந்தம்.

பத்துத்திசையுடையாராம் - பத்துப்
பத்துப்பத்தாந்திருப்பேருடையாராம்
பத்துக்கரமுடையாராந் - தவம்
பத்தினிலொன்றுபத்தாகச்செய்வாராம், ஆனந்தம்.

ஞானமுனேயப்பொருளும் - பற்றும்
ஞாதாவுமில்லையென்பார்க்கரியாராம்
ஞானமுனேயப்பொருளும் - பற்றும்
ஞாதாவுமாய்ப்பகுப்பார்க்குமெட்டாராம், ஆனந்தம்.

மெய்யிலணிவதும்பாம்பு - மலை
வில்லினிணுணய்விசிப்பதும்பாம்பு
கையிற்பிடிப்பதும்பாம்பு - அவர்
காட்டினநாடகங்காண்பதும்பாம்பு, ஆனந்தம்.

நாதத்துடியினடிப்பும் - மெல்ல
நடந்துநடந்துநடிக்குநடிப்பும்
வேதம்படிக்கும்படிப்பும் - நுதல்
மீதுவிளங்குகுறுவேர்ப்பொடிப்பும், ஆனந்தம்.

கையிற்கபாலத்தழகுந் - திருக்
காலினிற்பாதுகைசேர்த்தவழகும்
மெய்யணிநீற்றினழகும் - மையல்
மீறுங்குறுநகைமூரலழகும், ஆனந்தம்.

உடுப்பதுகாவியுடையாம் - மறை
ஓதிமந்தேடுஞ்சிரமேற்சடையாம்
எடுப்பதுபிச்சையமுதாம் - மார்பில்
ஏற்பதுகாமாட்சிகொங்கைச்சுவடாம், ஆனந்தம்.

ஆனந்தக்களிப்பு
முற்றிற்று.